Vol XII 1933 - 1934

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு.

பன்னிரண்டாம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
அவர்கள். பி. ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்.
ஸ்ரீமுக-பவ ௵

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly Ltd.
Tinnevelly and Madras

[Price Rs. 3 8 0

'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர்
கூட்டத்து உறுப்பினர்கள்
(Editorial Board Members)

உள்ளுறை

[* இக்குறியிடப்பட்டவைகள் இத் தொகுதியில் முடிவு பெறாது தொடர்வன.]

அகத்தியர்—திரு. கி. சாமிக்கண்ணு அவர்கள்; ௩௮௪, ௫௯௩

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ௩௫

அரியன பத்து—இ. சிவகுருநாதன்; ... ௪௭௩

அருஞ்செய்யுட் பொருட் பகுதி—திரு. இராமலிங்க தம்பிரான் அவர்கள்; ... ௰, ௧௪௩, ௪௧௪

அருஞ்செய்யுட் பொருட் பகுதி—சிரபுரம் கனக சபாபதிப் பிள்ளை அவர்கள்; ... ௨௮௭

அலைகடலளித்த ஆரணங்கு—சுவாமிக் கண்ணன்; ௯௫, ௧௯௪

ஆலகாலித் தத்துவஞானக் கொள்கைகள்—இராவ் சாகிப் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்; ௨௮௨

ஆரியர் நாகரிகமும் திராவிடர் நாகரிகமும்—திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள்; ௫௱௯

ஆலூர் மூலங்கிழார் பாக்களின் அருங்கருத்துக்கள்— ... ௨௱௧

இங்கும் அங்கும்—ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்; ... ௪௪

இடம்பை தருவன நான்கு—ஓரத்தி எம். முனுசாமி ஆச்சாரி; ... ௨௭௧

இந்திய ஐரோப்பியப் பெருங்குழு—திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள்; ... ௩௬௯, ௪௰௫

இந்தியாவும் சாவகமும்—திரு. S. நடராஜன் B.A. ௪௯௯

இராஜா இரவிவர்மர்—திரு. S. ஈசுவர மூர்த்தியா பிள்ளை அவர்கள்; ... ௩௧

இருவகைச் செல்வம்—திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்; ... ௧௮௧

இலுப்பைக்குடி— ௩௱௮

இனியவை நாற்பது (மொழிபெயர்ப்பு)—திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் M.A., B.L. ... ௨௰, ௭௰

இன்னு நாற்பது (மொழிபெயர்ப்பு)—திரு. T.B. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் M.A., B.L. ௧௮௭, ௨௨௬, ௨௮௰, ௪௨௬

உஞற்றுபவரும் உஞற்றிலவரும்—திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்; ... ௩௨௮

உடல்நலப் பகுதி—திரு. காசிகன் அவர்கள்; ... ௨௨௯, ௩௮௮, ௪௨௯, ௩௮௬

உயிரினங்களின் நிறவேறுபாடுகள் — திருமதி குணமாணிக்கத்தம்மையார் M.A., L.T., அவர்கள்; ... ௱௩௩, ௱௮௨

உலக அறிவின் பயன்—வித்வான் மு. சண்முக தேசிகர் அவர்கள்; ... ௫௨௩

*உளநூல்—திரு. மா. பாலசுப்பிரமணியம், M. A. அவர்கள்; ௪௫௯. ௫௰௫, ௫௪௭

ஊழும் முயற்சியும்—திரு. S. சகாதேவ முதலியார் அவர்கள்; ... ௱௰௩

எண்ணளவை — திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள்; ... ௪௰

ஐவகைக் காட்சியவர்—திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்; ௱௪௨

ஒளிநூல்—திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்; ௩௬, ௮௬, ௱௨௭, ௱௭௮, ௨௨௩, ௨௭௨, ௩௨௬

ஒற்றுமை நலம்—திரு. S. சகாதேவ முதலியார் அவர்கள்; ... ௪௱௭

கங்கைநீரின் சிறப்பு— ... ௪௪௧

கல்வியும் நூல் நிலயமும்—திரு. நாகை த. குமாரசாமி அவர்கள்; ... ௨௩௯, ௩௬௪

கன்னனும் கும்பகர்ணனும்—பண்டிதர். திரு. மா. இராஜமாணிக்கம் அவர்கள்; ௩௰௭, ௩௫௭, ௩௬௬

காசாக்குடி சாசனம்—திரு. பி. வி. ஜகதீசய்யர் அவர்கள்; ... ௩

காசுக்கட்டி—திரு. காசிகன் அவர்கள்; ... ௩அஅ
காப்பிக்கோட்டையின் வரலாறு— ... ௩சக
கார்த்திகை கமேம்புயல்— ... உச௩
காழிக் கண்ணுடைய வள்ளலார்—திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்; ... ௩கக
குரங்குகளின் பண்புநலங்கள்—திருநிறை. மிஸ். பி. இராபர்ட்ஸ், எம். ஏ., ... ௩எஅ, சகக
*குறுந்தோகை மூலமும் விளக்க உரையும்— இலந்தையடிகள் வித்வான் இரா. சிவ. சாம்ப சிவன் அவர்கள்; சருரு, ருா௩, ருச௩
கூடுவிட்டுக் கூடுபோய்தல் — திரு. மகிழ்நன் அவர்கள்; ... உரு
சதகுப்பை—திரு காசிகன் அவர்கள்; ... சஅஎ
சிவம்— ... உகக
சிவன்—பண்டிதர் சி. வீரபாகுப் பிள்ளை அவர்கள்; ... சசஎ, சகரு
சுவாமிநாத பண்டிதர்—திரு. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்; ... ௩ாக
செந்தமிழே தீர்க்க சுவாகா—உயர்திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள்; ... ௩கக, சருக
செய்திகளும் குறிப்புகளும் ... உகஉ, ௩சய, ௩அக, ச௩க, சஅக, ரு௩அ
சென்னை நகராண்மைக் கழகம் ... ௩ரு
சென்னை மாகாணத் தமிழர் மாநாடு ... ௩௩எ, ருகக, ருக௩
சைவர் மகாநாடு ... உருய, ௩ா, ௩சஎ
சோழர்கள் கல்வெட்டுகளிற் கண்ட சில குறிப்புக்கள்—இராவ் சாகிப் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்; ... எக, ாஉக, ாஎய, உயஎ, உகரு
ஸேயின்ட் ஆல்பன்ஸ் ... சஎச
ஜகதீஸ சந்திர போஸ் ... ௩௩க
ஜோன் வரலாற்றுச் சுருக்கம்—திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்; ... சக

தமிழகம் ... ௱௫௯, ௨௱௮, ௨௫௯, ௩௧௪, ௩௫௧, ௪௱௨

தமிழர் சமயம்—உயர்திரு. சுத்தாநந்த பாரதி அவர்கள்; ... ௪௯௭.

தமிழர் நாகரிகம்—திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள்; ... ௪௮௧.

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்—ஈப்போ திரு. தியாகராயன் அவர்கள்; ... ௱௰௯, ௱௬௫, ௨௰௩, ௨௬௧, ௩௨௰, ௩௫௪, ௪௱௪

திங்கள்—மறைமலையடிகள்; ... ௪௫௰.

திருச்சி மலைக் கோயில் ... ௮௨, ௱௨௪, ௱௭௪, ௨௨௧, ௨௬௯

திருப்பூந்துருத்தித் திருமடம் ... ௩௯௫

திருவாசகம் உரை—மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்; ... ௫௩, ௱௫௧, ௨௪௭, ௩௪௩

திருவாதவூர்—திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள்; ... ௭௫, ௱௩௯

தேவாரம் உரை—திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்; ... ௧, ௱௧, ௱௯௯, ௨௯௫, ௩௯௧, ௪௪௩, ௪௯௧, ௫௩௯

தேவாரவைப்புத் தலங்கள் ... ௨௫௮

தொல்காப்பியர் (வித்வசிகாமணி)—திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்கள்; ... ௩௨௩

நகேல்—வித்வான் திரு. இலந்தைச் சாம்பசிவன் அவர்கள்; ... ௱௯௰

நாயுடு. சுப்பிரமணிய பிள்ளை ... ௪௩௪

நால்வகைக் காண்பதறிவு ... ௩௨௩

நிலக்குப் பொறை ... ௯௯

பச்சைகுத்துதல் ... ௨௭௯

பண்டைத் தமிழிலக்கியம்—பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள்; ... ௪௰௮

பண்டைத் தமிழ்நூல் மாண்பு—திரு. K. சிவராம கிருஷ்ண நாவலர் அவர்கள்; ... ௰௯

பதிற்றுப்பத்து விளக்கம்—பண்டித திரு. அ. நட
ராஜ பிள்ளை அவர்கள்; ... ௬௧

பயனுள்ள கல்வி--சுவாமி விபுலாநந்தர் அவர்
கள் .. ௪௱௰, ௪௬௭

பரங்கிமலை ... ௫௧௪

பாவினம்—வித்வான் G. தேவநேசன் அவர்கள் ௰௧, ௬௪

புதுக்கவிகள்—திரு. S. தேசிக விநாயகம் பிள்ளை
அவர்கள்; ... ௬௮

புத்தபகவான் பொருண் மொழிகள்—பண்டித
திரு. அ. நடராஜ பிள்ளை அவர்கள்; ... ௬௯, ௱௧௨,
௱௬௯, ௨௪௯, ௩௨௯, ௩௬௫

புராணங்கள் உண்மை வரலாறுகளா?—திரு.
டாக்டர் ஜி. போஸ் அவர்கள், ... ௪௭௯

பூவை கலியாண சுந்தர முதலியார் ... ௪௨௯

பெருங்காயம்—திரு. காசிகன் அவர்கள்; ௪௮௮

பேருண்டியருந்தல் ... ௪௭௬

பொதுப்பள்ளியெழுச்சி—ஆசிரியர் திரு. சுந்தரம்
பிள்ளை அவர்கள்; ௭

பொருணூல்—திரு. க. நடராஜ பிள்ளை B. A.
(Hons) அவர்கள்; ௨௭௫, ௩௨௩,
௩௮௧, ௪௨௨, ௪௬௪, ௫௨௰., ௫௫௰

மக்கட் பகுதியும் மாண்புறு கலைகளும் ... ௩௬௰

மதிப்புரை ... ௬, ௱, ௩௪௨,
௩௭௭

மத்தவிலாசப் பிரகசனம்—திரு. தி. கி. நாரா
யணசாமி நாயுடு அவர்கள்; ... ௩௩௩., ௪௩௧,
௪௭௫, ௩௨௭, ௫௫௭

மரநூல்—திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்
அவர்கள்; ... ௮௬, ௱௩௰

மும்மையாவுலகாண்ட மூர்த்தி—திரு. T. P.
மீனாட்சி சுந்தரம் பிள்ளை M. A., B. L., அவர்கள் ௫௬, ௱௬,
௱௫௫, ௨௱௨, ௨௫௫, ௩௱௪

மேற்கோள்களும் அவற்றை அறிவு வளர்ச்சிக்குப்
பயன் படுத்தும் முறையும்—திரு. மா. வே.
நெல்லையப்ப பிள்ளை அவர்கள். ௩௩௰, ௩௭௩

வெண்ணெய் அண்ணல்—திரு. மா. இராஜ
மாணிக்கம் அவர்கள்; ... ௯௬௫, ௨௧௧

வெறுஞ்சிறு மொழி ... ௬௪

வைத்தியரத்னம் C. S. முருகேச முதலியார்
வரலாற்றுச் சுருக்கம். ... ௨௪௧

படங்கள்

அகத்திய முனிவர் ௪௬௧
இராஜா இரவி வர்மர் ௧
காஞ்சி - நாயனுப் பிள்ளை ௫௬௧
பேராசிரியர், சுந்தரம் பிள்ளை, P. ௯௭௧
ஜகதீஸ சந்திர போஸ் ௨௬௭
ஜோன் படைத் தலைவி ௪௬
*திருப்பரங்குன்றம் கோயில் ௭௫
தொல்காப்பியர் ௨௪௭
பூவை - கலியாணசுந்தர முதலியார் ௪௪௫
முருகேச முதலியார், C. S. ௯௬௬
மெய்கண்டதேவர் கோயில் ௯௧

*திருவாதர் என்று அச்சிட்டிருப்பது தவறு.



இராஜா இரவி வர்மர்.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எாயி ஆவணித் திங்கள் 1933ஹு ஆகஸ்டுமூ—செப்டம்பர்மூ	பரல் க

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்.

விண்டோ ழிந்தன நம்முடை வல்வினை
  விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய
  விறைவனை யுலகத்தில்
வண்டு வார்குழல் மங்கையோர் பங்கனை
  வலஞ்சுழி யிடமாகக்
கோண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ
  டினிதிருந் தமையாலே.

பதவுரை:—

விரிகடல் வருநஞ்சம்—இடமகன்ற கடலினின்றெழுந்த நஞ்சை

உண்டு இறைஞ்சு வானவர்தமைத் தாங்கிய இறைவனை—தானுண்டு (நஞ்சு எங்களைத் தொடர்ந்து கொல்லாது காக்கவேண்டுமென்று) வணங்கின தேவர்களைக் காத்த கடவுளும்,

வண்டு வார்குழல் உமைபங்கனை—வண்டுகள் மொய்க்கின்ற நீண்ட கூந்தலை உடைய உமாதேவியாரை, இடது பக்கத்தில் வைத்திருக்கிறவனும்,

உலகத்தில் வலஞ்சுழி யிடமாகக் கொண்டநாதன்—இவ்வுலகில் திருவலஞ் சுழி என்ற தலத்தைத் தான் உறையுமிடமாகக் கொண்ட தலைவனும் ஆகிய சிவபெருமானுடைய,

மெய்த்தொழில்புரி தொண்டரோடு இனிது இருந்தமையால்—உண்மைப் பணிகளை அன்புடன் விரும்பிச் செய்கின்ற தொண்டர்களோடு கூடி இணங்கி இருந்த காரணத்தால்,

நம்முடை வல்வினை—அடியார்களாகிய நம்மைச் சேர்ந்திருந்த வலிய வினைகளெல்லாம்,

விண்டு ஒழிந்தன—நம்மை விட்டு நீங்கின.

குறிப்புரை:—

வானவர் தமை—தம் - அசை.

மெய்த்தொழில்புரி தொண்டர்—என்பது பிறர் புகழ்தலுக்காக அல்லாமல் தாங்களாகவே மனமுவந்து விரும்பிச் செய்கின்ற தொண்டர்.

நம் உடை வல்வினை—நம்மை நம் வயமாயிருக்க வொட்டாது தன் வயப்படுத்தியிருக்கும் வல்வினை. உடை - உடைத்தாயிருக்கிற நம்மைத் தன் வயப்படுத்தும் வினை வல்வினை எனப்பட்டது.

விண்டு ஒழிந்தன—விட்டு நீங்கின. வினை என்பது சாதியொருமைப் பெயராய வினைகளைக் குறித்தலால் அஃது ஒழிந்தன என்னும் பன்மை வினைகொண்டு முடிந்தது.

இப்பாட்டில் உண்மைப் பணிசெய்யுந் தொண்டர்களுடைய இணக்கத்தினுல் வலிய வினைகள் நீங்கும் என்பது கூறப்பட்டது. வண்டுவார் குழல் உமைபங்கன் என்பதனுல் சிவபெருமான் அருளுடையவன் என்பதும், விரிகடல் நஞ்சமுண்டு வானவர் தமைத் தாங்கிய என்பதனுல் அவன் அந்த அருளை உயிர்களுக்கு இடர் வந்தபொழுது வழங்கி அவைகளினுடைய இடரைத் தீர்த்துக் காக்கிறவன் என்பதும் குறிப்பிடப்பட்டன. பேர் அருளுடைய சிவபெருமான் உயிர்களுடைய நலத்தையே நாடிச் செய்விக்கிறவன் ஆதலின் அவனுடைய உண்மைத் தொழில்புரி தொண்டும் அடியார்களுக்கும் பிற மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் அருளினுலே பயன் கருதாது செய்யப்படுகிற தொண்டாகவே யிருக்கும். அத்தகைய தொண்டைத் தங்களுடைய மெய்வருத்தம் நோக்காது மனமுவந்து செய்கிற தொண்டர்கள் அருள்விளங்கப் பெற்றவர்களா யிருத்தலினுலே அவர்களோடிணங்கிக் கூடி யிருக்கிறவர்களுடைய வலிய வினைகளும் ஒளிமுன் இருள் நீங்குதல் போல அவர்களை விட்டு நீங்கும் என்பது இப்பாட்டின் கருத்து.

வினை—எழுவாய். ஒழிந்தன—பயனிலை. இருந்தமையாலே என்பதிலுள்ள ஏ, அசை. இறைவனை, பங்கனை என்பவற்றிலுள்ள இரண்டு ஐ களும் அசை.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

ஆராய்ச்சிப் பகுதி-Research

காசாக்குடி சாசனம்

'பழைய கல்வெட்டும் செப்புப்பட்டயமும்'

[திரு. பி. வி. ஜகதீசய்யர் அவர்கள்.]

காசாக்குடி சாசனம் எனப் பெயர் வழங்குவது, அந்தச் செப்புப்பட்டயம் சோழமண்டலத்திலடங்கிய தஞ்சாவூர் ஜில்லாவில் பிரென்சுக்காரர்களது இராஜ்யத்திலுள்ள காரைக்காலின் அருகிலிருக்கும் காசாக்குடி எனப்படு மிடத்திலிருந்து கிடைத்ததுபற்றியேயாம். ஆனல் இந்தச் செப்புப்பட்டயத்தி லடங்கிய பொருள் சோழ மன்னனது சம்பந்தமில்லாததுமன்றி, அதிலடங்கிய தானமும் அத்தேசத்திலுள்ள நிலத்தைப் பற்றியது மன்று. இது பல்லவ மன்னர்களது என்பது இப்பட்டயங்களைக் கோர்த்துள்ள செப்பு வளையத்தில் போடப்பட்டிருக்கும் இடப முத்திரையிலிருந்து தெரியவரும். இடப முத்திரை தொண்டைமண்டலத்தில் அரசு செலுத்தின பல்லவ மன்னர்களதாகும். இப்பல்லவ மன்னர்களுள் காஞ்சிமாநகரைத் தலைநகராகக்கொண்டு கி. பி. 717 முதல் 779 வரை நீடித்தகாலம், நந்திவர்ம பல்லவ னெனப்படும் இரண்டாவது நந்திவர்ம பேரரசன் அந்நாட்டை மிக்க சிறப்புடன் அரசாண்டு வந்தான். இவனது ஆட்சிகாலத்தில் இருபத்திரண்டாம் ஆண்டில் வெளியிடப்பட்டது இந்தக் காசாக்குடி சாசனம்.

இப்பட்டயத்தில் காணப்பட்டிருக்கும் தானம் "கோடுகோள்ளி" எனப்படும் கிராமத்திலடங்கிய பூமியைப்பற்றியதாகும். இவ்வூர் அந்தகாலத்தில் "ஏகதீரமங்கலம்" எனப் பெயரிடப்பட்டிருப்பது இம்மன்னனது பட்டப்பெயராகிய 'ஏகதீரன்' என்பதிலிருந்தே யாகவேண்டும். இவ்வூர் திருநாமநல்லூரின் அருகிலுள்ளதாகத் தெரியவருகிறது. இம்மன்னனது மந்திரியாகிய பிரம்மஸ்ரீராஜன் எனப்படும் பிரம்ம யுவராஜாவின் வேண்டுகோளின்மேல் ஜேஷ்ட பாத சோமயாஜின் என்பவருக்கு இக் கிராமத்திலுள்ள நிலம் தான சாசனமாய்க் கொடுக்கப்பட்டது. இத்தானத்தைப்

பெற்றபிராம்மண சிரேஷ்டர் பாரத்வாஜகோத்திரத்தி லுதித்தவர். இக் கிராமம் கிடைப்பதற்கு முன்னர் அவர் பூனி எனப்படும் கிராமத்தில் வாசம் செய்தனராம். பூனியே தற்காலம் பூண்டி என்று வழங்கிவரு மிடமா யிருந்திருக்கலாம். அக்காலத்தில் இந்த தான கிராமமாகிய கொடுகொள்ளி ஊற்றுக்காட்டுக் கோட்டத்தைச் சேர்ந்திருந்ததும் செப்புப் பட்டயத்தில் தெரிவிக்கப் பட்டுளது. அவ்வூரின் நான்கெல்லை குறிப்பிட்டிருப்பதாவது :— கிழக்கு, தெற்கில் பாலையூர் (பாலூர்); மேற்கில் மணற்பாக்கம் (மேல்மணப்பாக்கம்), கொள்ளிப்பாக்கம்; வடக்கில் வெளிமா நல்லூர். சர்வ சுதந்தரங்களுடனும் இந்த கொடுகொள்ளி கிராமம் தானம் கொடுக்கப்பட்டதுமல்லாமல் சேயாறு, வேகவதி, திரையனேரி இவைகளிலிருந்து ஆற்றுக்கால் வெட்டிக் கொள்ளவும் அநுமதி அளிக்கப்பட்டுளது. இக்கிராமங்களெல்லாம் காஞ்சிபுரம், செங்கற்பட்டு தாலூகா மத்தியிலுள்ளவைகள்.

இந்த இரண்டாவது நரசிம்மவர்மன் அறுபத்தைந்து வருஷ காலம் (கி. பி. 710-முதல் 775-வரையில்) இராஜ்யபாரம் செய்து தனது எழுபத்தைந்தாம் வயதிலிறந்ததாகத் தெரியவருகிறது இவனது காலத்தில் கொடுக்கப்பட்ட தான சாசனங்களுள் முக்கியமானவை இந்தக் காசாக்குடி சாசனம், உதயேந்திரம் சாசனம், தண்டந்தோட்டம் சாசனம், கொற்றங்குடி சாசனம் இவைகளே. இவனது காலத்தில் இரண்டாவது விக்கிரமாதித்தன் காஞ்சிமாநகரைத் தாக்கி அவ்விடத்தைப் பிடித்துக்கொண்டான். இது நேரிட்டது நந்திவர்மன் தென்தேசம் படை யெடுத்துப் போயிருந்த காலத்தி லாகவேண்டும். சிலகாலம் காஞ்சிமாநகரைச் சளுக்க விக்கிரமாதித்தன் பிடித்துக் கொண்டாலும், அவ்விடத்தில் கிடைத்த தனத்தை அங்குள்ள கோயில்களுக்கே தானம் செய்தான்! நந்திவர்மன் காஞ்சி திரும்பினதும், விக்கிரமாதித்தன் அவ்விடம் விட்டுத் துரத்தப்பட்டான்.

தட்சிணத்தில் நந்திவர்மன் படை யெடுத்துப் போயிருந்த காலத்தில் கும்பகோணத்தி னருகாமையிலுள்ள நந்திபுரத்தில், தமிழ்நாட்டு மன்னர்களால் முற்றுகை செய்யப்பட்டான். இந்த நந்திபுரமே இப்பொழுது நாதன் கோயில் எனப்பட்டு வருகிறது. இம்மன்னன் சமஸ்கிருதம், தமிழ் இரண்டு பாஷைகளிலும் அதிக

பாண்டித்யம் பெற்றிருந்தான்; பல வித்வான்களை ஆதரித்தான். திருமங்கை யாழ்வார் இவனைத் தமது பாடல்களில் புகழ்ந் திருக்கிறார். காஞ்சீபுரத்திலுள்ள முத்தேசுவரன் கோயில், வைகுண்டப்பெருமாள் கோயில், திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில், புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள குன்றாண்டார் கோயில் இவைகளைக் கட்டிவைத்து அவைகளுக்கு ஏராளமான பூமிதானம் செய்திருக்கிறான். இவன் இறந்ததும் இவனுக்கு ராஷ்டிரகூட வம்சத்து இராஜகுமாரத்தியாகிய ரேவா எனப்படுபவளிடம் பிறந்த தந்திவர்மன் பட்டம் பெற்றான்.

சாசனத்தின் விவரம்

பல்லவர்களது வம்சாவளி இப்பட்டயத்தில் விளக்கிக் காட்டப்பட்டுளது. பிரம்மாவின் மானச புத்திரன் அங்கிரசு. இவரது புத்திரன் பிருகஸ்பதி. பிருகஸ்பதியின் புத்திரன் சம்யு. சம்யுவினிடமிருந்து உற்பத்தியானவர் பரத்வாஜர். இந்த பரத்வாஜ மஹரிஷியின் குலத்தி லுதித்தவர்களே பல்லவர்கள். இப்பல்லவர்கள் தனுர் வித்தையை நன்குணர்ந்தவர்கள். பரத்வாஜரின் புத்திரர் அசுவத்தாமன். எப்படி குளிர்ந்த மேகத்தினிடமிருந்து வெளிவரும் இடி தீக்குணமுடையதாய்க் காணப்படுகிறதோ அப்படியே பிராம்மண வம்சத்தி லுதித்தாலும், அசுவத்தாமன் க்ஷத்திரிய புஜபலம் பெற்றிருந்தான். இந்தப் பல்லவ குலத்தில் தோன்றினவர்களே ஸ்கந்த வர்மன், கலிந்தவர்மன், காணகோபன், விஷ்ணுகோபன், வீரகூர்சி, வீரசிம்மன், சிம்மவர்மன், விஷ்ணுசிம்மன் முதலிய மன்னர்கள். பின்னர் தோன்றிய சிம்மவிஷ்ணு என்பவர் சத்துருக்களிடம் சிம்மம்போலவே காணப்பட்டான். இம்மன்னன் மலயம், களப்பரம், மாளவம், சோழம், பாண்டியம், சிம்மளம், கேரளம் இந்நாடுகளைக் கைக்கொண்டான். அதன் பின்னர் புள்ளலூரில் எதிரிகளை முறியடித்த மஹேந்திரவர்ம னுதித்தான். இவனது புத்திரன் வடதேசம் சென்று வாதாபி (பம்பாய் ராஜதானியிலுள்ள பாதாமி) யில் சத்துருக்களை ஜயித்த நரசிம்ம வர்மன்; நரசிம்மவர்மன் புத்திரன் இரண்டாவது நரசிம்ம வர்ம னெனப்பட்டவனும் சிற்ப மஹிமை வாய்ந்த கோயில்களைக் கட்டியவனுமாகிய இரண்டாவது மஹேந்திரவர்மன். இந்த இரண்டாவது நரசிம்ம வர்மனிடம் பிறந்த பரமேசு

வர போத்தரையனது புத்திரன் மூன்றுவது நாசிம்மவர்மன். இம் மன்னனது புத்திரன் இரண்டாவது பரமேசுவர போத்தரையன். பின்னர் இப்பல்லவ பட்டம் பெற்றவனே பீமனது மாபில் வந்த நந்திவர்ம மன்னன். இவனது காலத்தி லேற்பட்ட இந்த தான சாசனத்தில்,

ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டிக்கொள்ள அநுமதி கொடுக்கப்பட்டது

"....இந்நாற் பேரெல்லை யுள்ளும் அகப்பட்ட நீர் நிலனும் புன்செயியும் உடும்பொடி ஆமை தவழ்வதெல்லாம் சேயாற்றுலும் வெஃகாவினுலும் திரையனேரியாலுங் நீரீந்தவழி ஆற்றுக்காலும் வெள்ளக்காலும் தோண்டிக் கொண்டுண்ணப் பெறுவாராகவும். இக்கால்களுக்கு கொல்கலமும் புழுதி பாடும் பெறுவதாகவும். இக்கால்களில் கூடை இறைத்துங் குறங்கறுத்தும் குற்றேத்தம் பண்ணியும் கொண்டுண்டார் கோக்கொள்ளும் தண்டப்படுவாராகவும்."

மதிப்புரை

சமரச சன்மார்க்க போதம்:—உரைநடை யாசிரியர்களில் தற்காலத்திற் சிறந்தவர்களென்று கருதப்படுவோர்களுள் ஒருவராகிய திரு. வி. கலியாணசுந்தா முதலியார் அவர்கள் சமரச சன்மார்க்கத்தைப் பற்றித் தனிநூல் ஒன்று இயற்றுமாறு இயற்கை யன்னையால் தூண்டப்பட்டு "நவசக்தி" பத்திரிகையில் அவ்வப்போது சிறிது சிறிதாக எழுதிவந்த பல கருத்துரை மணிகளைத் திரட்டிச் சேர்த்து வெளியிட்டதே இந்நூலாகும். இதன்கண், சத்தின் இயல், மார்க்கத்தின் விளக்கம் சமரசத்தின் சிறப்பு, குருமார் நிலை, சீர்திருத்தமுறை சங்க அமைப்பு முதலிய பல பெரும்பொருள்கள் சுருங்கிய முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. இயற்கை, இறை, துறவறம், பெண்மை, யோகம் முதலியவற்றைக் குறித்துத் திரு. முதலியாரவர்கள் மிகவும் ஆழ்ந்து சிந்தித்து வெளியிட்டிருக்கும் மணியனைய கருத்துகள் சீரிய முறையில் அறிவை வளர்க்கக் கருதும் யாவராலும் கற்றுத் தேர்ந்து தெளிதற் குரியனவாம். இவ்வழகிய சிறு நூலின் விலை அணு எட்டு. வேண்டுவோர்; முருகவேள் புத்தகசாலை, 12 கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை சென்னை என்ற இடத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புதுக்கவிகள் - Original Poetry

பொதுப்பள்ளி யெழுச்சி

['மனோன்மணீய' ஆசிரியர் திரு. சுந்தரம்பிள்ளை அவர்கள் M.A. F.M.U. M.R.A.S. & F.R.H.S.]

ஆசிரிய விருத்தம்.

பரிதியி னொருசிறு கதிர்வரும் வெளியே
பலவணுத் திரளினை மிலகுறு முறையே
கருதரு நினதருட் கதிர்வர அடியேங்
கரணமும்[1] புவனமும் புரணமதுறவே[2]
உருவற விழுங்கிய வுறக்கம்விட் டெழுந்தோம்
உன்னருள் பரவிட வுவந்திவ ணிருந்தோம்
இருதயத் தினிச்சகம் எறிடு முன்னம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (1)

ஒன்றிய விவேகமா முயர்குணம் போக
உண்பது முடுப்பது மேகதி யாக
நின்றுழ லாவகை நெஞ்சினீ நின்று
நிஷ்கள சித்தமே[3] சத்கதி யென்று
நன்றுடன் தீதுணர் நடுநிலைப் பேறே[4]
நல்கிய நின்னருட் கென்னகை மாறே
இன்றுமத் தொல்லரு ளெமையுவந் தாள
எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (2)

---

1. கரணம்—கண் முதலிய வெளிக்கரணங்களும் மன முதலிய அந்தக்கரணங்களும்.

2. ஸ்புரணம்—வெளிப்படல், தோற்றல்.

3. நிஷ்களசித்தம்—பரிசுத்த மனசு.

4. நடுநிலைப்பேறு—(Conscience) மனோசாட்சி

நன்றெனத் தீதென நீநடு நின்று
நல்லொளி காட்டியுஞ் செல்லலற் றின்று
நின்றனம். நடுதறி[1] யொன்றிடக் கட்டி
நிறுத்திய கயிற்றை யவிழ்த்தும் பின்றட்டிக்
கன்றைநற் ருயிடம் விடுத்திடு மாறே
காட்டிய நல்வழி கூட்டிவை பேறே
என்றுநின் னல்லரு ளன்றியொன் றெய்தேம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (3)

சித்தநற் சுத்தியே முத்தியின் வித்தாத்
தேற்றநீ தந்தும்பின் சிற்றின்பம் பற்ருத்[2]
தத்துறு வேமையிச் சழக்கிற்[3] கைதூக்கிச்
சடத்துவம் போக்கிநின் றன்வய மாக்கி
நித்தமெந் திரிவித காணநன்[4] னெறிக்கே
நின்றிட வமைத்தரு ளின்றிதிற் குறுக்கே
எத்தனை வரினுங்கே டத்தனை யுங்காத்
தெம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (4)

தப்பரும் பலதொழிற் சாகர நடுவே
சடலமென் சிறுதோணி விடவொருப் படுவேம்
முப்பெருங் குற்றமா[5] மூன்றுள வோட்டை
மொழிமுதற் றுணைகளோ[6] வொழிகில சேட்டை
எப்புறம் பார்க்கினுந் தப்பருங் கேடே
எங்ஙனந் துழாவியா மெய்துவம் வீடே
எய்ப்பினி னின்னரு ளிளவளி[7] யீவான்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (5)

---

1. நடுதறி—கட்டுத்தறி; கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விடுப்பினும் தாயிடஞ் சேராக் கன்றைத் தட்டி ஏவுதல் வழக்கம்.

2. பற்ரு—பற்றி.

3. சழக்கு—மயக்கம்.

4. திரிவித கரணம்—மனம் வாக்குக் காயம்.

5. முக்குற்றம்—காமம் வெகுளி மயக்கம்.

6. மொழி முதற்றுணை—வாக்கு முதலிய கருமேந்திரியம் ஐந்தும் கண் முதலிய ஞானேந்திரியம் ஐந்தும்.

7. இளவளி—இளங்காற்று,

நித்திரை செயுமனை நெருப்புறப் படையும்
　　நெருங்க,விட் டேகுவார் நெஞ்சச்சக் கிடையும்,[1]
உத்திகொண் டோடுநாய்க் கொருமுழங் கூட்டி
　　யோச்சிடுங் கல்லும்போ லூக்கம்பா ராட்டிச்
சித்தத்துஞ் செறியாது தீவினை வெருவிச்
　　சேட்டித காமாதிக் கூட்டமுற் றொருவி
இத்தகை யெம்பணி முற்றிடும் வண்ணம்
　　எம்பெருமா னெம்முள் ளெழுந்த ருளாயே. (6)

நல்லது கண்டுமற் றல்லது பற்றும்
　　நாணறு சங்கற்ப நலிபடை சுற்றும்;
எல்லையிலாவெளி மானதக் கோட்டை,[2]
　　இந்திரி யப்படை யிதிற்செயுங் கேட்டைச்
சொல்லவோ வாயிலை; சூழிருண் மூலஞ்
　　சுதந்தர மற்றுளஞ் சோர்ந்திடுங் காலம்
இல்லையுன் னருளெனி லெங்ஙன முய்வோம்
　　எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (7)

வெங்கதிர்ச் செல்வனுந் திங்களும் விண்ணும்
　　வீசுமா சுகங்[3]கனல் விரிபுனன் மண்ணுந்
தங்குநின் னாணையிற் றந்தொழிற் பரணஞ்
　　சந்ததம் புரிவபோ லெந்தனு கரணந்
துங்கநல் லறவழி தங்கிநின் றொழுக
　　சுதந்தர மடியேங்க ளகங்கா நழுவ
இங்கு நின்றொல்லரு ளீந்தளித் திடுவான்
　　எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (8)

குணக்கெழு கதிரவன் குடக்கடை முனமே
　　குறும்புசெய் தழித்திடுங் கொடுநினை வினமே
கணக்கிட வெளிதல. கருத்திடைக் கூடிக்
　　கவலைசெய் யவலமோ கணங்கணங் கோடி.

---

1. நெஞ்சச்சக்கிடை = நெஞ்சத்துள்ள அச்சத்தின் றன்மை.
2. மானதக்கோட்டை = மனசாகிய கோட்டை.
3. ஆசுகம் = காற்று.

பிணக்குறு முளத்தினி யழுக்கிவை போகப்
போருட் காந்தத்தி னேரிரும்பாக[1]
இணக்கிநின் பதந்தா விதுவொரு தருணம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தரு ளாயே. (9)

தங்கிய விருளிற்சஞ் சரிக்குமின் மினியாச்
சலிக்குஞ்சார் போதமே சதமென மதியா
சங்கைகொ ளுளத்தராத் தலைதடுமாறுந்
தருக்கிகள் போம்வழி யொழித்திது காறும்
பொங்கிய கருவமும் புலமையும் விடுத்தோம்
புத்தியிற்[2] பத்தியே பொருளென வடுத்தோம்
இங்குமற் றெளியேங்கட் கிந்நெறி போதும்
எம்பெரு மானெம்முள் ளெழுந்தரு ளாயே. (10)

1. ஆக—என்பதின் எழுவாய் முன்வரியிலுள்ள உளம்.
2. புத்தியில்—புத்தியைவிட.

அருஞ்செய்யுட் பொருட்பகுதி

நாலடியார்

எனதெனது என்றிருக்கும் ஏழை பொருளை
எனதெனது என்றிருப்பன் யானும் - தனதாயின்
தானும் அதனை வழங்கான் பயன் துவ்வான்
யானும் அதனை யது.

இதன் பொருள்: என்னுடையது என்னுடையது என்று (பொருளிடத்து மிகுந்த பற்றுவைத்துச் செலவு செய்யாமல்) இருக்கிற அறிவில்லாத உலோபி (சேர்த்து வைத்துக் கொண்டுள்ள) செல்வத்தை, (அப்பொருளோடு யாதொரு தொடர்புமில்லாத) யானும் என்னுடையது என்னுடையது என்று (பற்றுவைத்திருப்பதாகத் தோன்றக்) கூறிக் கொண்டு மகிழ்வுற்றிருப்பேன். (அச்செல்வம்) அவனுடையதா யிருக்குமானல், அவன் தானும் அதனைப் (பிறர்க்குக்) கொடுத்து இன்பப்பயனைத் தான் அடைதல் கூடுமே அது செய்கிறதில்லை; நானும் அப்பொருளை அப்படியே (பிறர்க்கு வழங்கிப் பயன் துய்த்தல் செய்யேன்).

இப்பாட்டு பொருணுட்பம் நிறைந்து நகைச்சுவை பயவாநிற்கின்றது.

இலக்கண இலக்கியப் பகுதி
Language & Literature

பாவினம்

[வித்துவான் G. தேவநேசன் அவர்கள்.]

வடமொழிக்கும் தென்மொழிக்கு முள்ள இயைபு பற்றிய திரிபுணர்ச்சிகளுள், பிற்காலத் தமிழ்நூல்களிற் பெருவழக்கான பாவினங்கள் வடமொழி யாப்புவழிப் பட்டன வென்பது மொன்றும். அஃது எத்துணை உண்மையென ஈண்டாராய்வாம்:—

துறை தாழிசை விருத்தமென்னும் மூவகைப்பாவினங்களுள் விருத்த மொன்றே வடமொழிப் பெயரால் வழங்குவ தாகும். அஃதூஉம் பெயரான் மட்டும் வடமொழியே யன்றி யாப்பா னன்று. மூவகைப் பாவினங்களுள் துறை தாழிசை யென்னு மிரண்டுந் தமிழாயிருக்க, ஏனையொன்று மட்டும் வடமொழியா யிருத்தல் எங்ஙனம்? ஏனை மொழிகட்கெல்லாமில்லாத பரந்த யாப் பிலக்கணம் தமிழிலிருக்கவும், வடமொழியாப்பை வேண்டிற்றென்றல் விந்தையிலும் விந்தையே. "வெண்பா முதலிய செய்யுளிலக் கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமை யானும்" என்றார் சிவஞான முனிவரும். ஆங்கிலயாப்புப் பலவகைப் பாக்கூறுமேனும் தமிழ்போல அத்துணைப் பரந்துபட்டதன்று.

ஒரு மொழியானது காலஞ் செல்லச்செல்ல, அவ்வக்காலத்து மக்கள் இயல்பிற்கும் அறிவிற்கு மேற்றவாறு இலக்கியத்தினும் இலக்கணத்தினும் திரிதல் இயல்பே. அங்ஙனம் தமிழ் யாப்பும் சங்ககாலத்திற் பாவாயிருந்து பிற்காலத்தில் பாவினமாகத் திரிந்தது.

எல்லாப் பாவினங்களும் கலிப்பாவினின்றே தோன்றியவாகும். வெண்பா, ஆசிரியப்பா என்னு மிரண்டும் பெரும்பாலும் வரம்பிறவாதன. வஞ்சிப்பாவும் மருட்பாவும் கலப்புப் பாக்களேனும், அவையும் அவற்றுக் கோதியவாறு ஒருவகை வரம்புபட்டனவே. ஆனால் கலிப்பாவோ ஓர் கட்டின்றி எல்லாவடியானும் எல்லா வோசையானும் பற்பலவுறுப்புப்பெற்று வரம்பிகந்து வரு

வதாகும். அதனுள்ளும் கொச்சகக்கலியோ எனைக் கலிகட்குரிய சீரும் எல்லையும் இகந்து,

"தாவின்றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தாவுடைத்தாகியும்
எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது" ஆயும்
"தாவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பாவியலான் வெளிப்படத் தோன்று"

வதாயும் பற்பலவாற்றான் மிக்குங் குறைந்துந் திரிந்தும் வருவதாகும். கொச்சகக்கலியுள் ஒருவகையே பரிபாடலென்க.

இற்றைத் தமிழ் நூல்கட்கெல்லாம் முன்னூலாகிய தொல்காப்பியத்தில் பாவினம் கூறப்படாவிடினும், அவற்றின் றோற்றத்திற்குக் காரணமான இயல்களை ஆங்காங்குக் காணலாம்.

துறை: துறையென்பது தொல்காப்பியத்துள்,

"வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே"

என ஒருவகைப் பாடாண் செய்யுட்குப் பெயராக வந்துள்ளது. அது செந்துறைப்பாடாண் பாட்டெனப்படும். அது கடவுள் வாழ்த்துப்பற்றி வரும் ஒருவகைக் கலிப்பா. வண்ண மென்பதே கலிப்பாவையுங் கடவுள் வாழ்த்தையு முணர்த்தும்.

"மூவா முதலா" என்னும் சீவகசிந்தாமணிக் கடவுள் வாழ்த்துச் செய்யுளை, முன்னோர் கூறிய குறிப்பின்கண் வந்த செந்துறைப் பாடாண்பகுதி யென்றனர் நச்சினார்க்கினியர்.

பாடாண்டிணை தெய்வம் பராவல், மக்களேத்தல் என்னும் இருபாற்பட்டுவரும். அவற்றுள், தெய்வம் பராவல் பெரும்பாலும் கலிப்பாவாலேயே வரும். தெய்வத்தின் பல குணங்களையும் திருவிளையாடல்களையும் வடிவுகளையும் வண்ணித்துப் புகழ்தற்குக் கலியுறுப்புக்கள்போலப் பிற பாக்கள் சிறவாமை காண்க.

ஒத்ததாழிசைக்கலி இருவகையென்று கூறி அவற்றுள் ஒன்று,

"தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே"

என்றார் தொல்காப்பியர்.

சிந்தாமணியினுஞ் சிலப்பதிகாரத்தும் தெய்வம் பராவுஞ் செய்யுட்களெல்லாம் ஒருபோகும் கொச்சகமுமாகக் கலிப்பாக்களாகவே வந்தன. இவ்வழக்குப் பற்றியே தெய்வம் பராவும் கொச்சகங்கள் தேவபாணி, பெருந்தேவ பாணியெனப்படுவன.

கலம்பகத்திற் கடவுள்வாழ்த்து கொச்சக ஒருபோகாற் கூறப்படுவதுங் காண்க. அராகம்! அம்போதரங்கம் முதலிய கலியுறுப்புக்கள் கடவுள் வாழ்த்திற்கே சிறப்பாயுரியன.

இனி, துறையென்பது புறத்திணையியலில் திணைப் பிரிவாகவுங் கூறப்பட்டுள்ளது.

அதனுரையில்,

"மக்களும் மாவும் முதலியன சென்று நீருண்ணுந் துறை போலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதலாகு மார்க்கமாதலிற் றுறையென்றார், எல்லாவழியு மென்பதனை எல்லாத் துறையுங் காவல் போற்றினர் என்பவாகலின். எனவே திணையுந் துறையுங் கொண்டாராயிற்று. அகத்திணைக்குத் துறையுட் பகுதிகளெல்லாம் விரித்துக்கூறிப் பின்னும் பன் முறையாற் பரந்துபட்டு வரம்பிகந்தனவற்றையுந் தொகுத்துத் துறைப்படுத்துக் கூறுக என்றற்குச் செய்யுளியலுள் துறையென்பது உறுப்பாகக் கூறினர். புறத்திணைக்கு அங்ஙனம் பரந்து விரித்தோதாது தொகுத்து இலக்கணஞ் செய்தாராயினும் அவையும் அவ்வாறே பலபொருட்பகுதியும் உடையவென்று உணர்த்துதற்குத் துறையெனப் பெயராகக் கொடுத்தார். இதனானே அகப்பொருட் பகுதி பலவாயினும், ஒரு செய்யுட் பல பொருள் விராஅய்வரினும் ஒரு துறை யாயினாற்போலப் புறத்திணைக்கும் அவ்வப்பொருட் பகுதியும் ஒரு துறையாதலும் ஒரு செய்யுட் பல துறை ஒருங்கு வந்தும் ஒருதுறைப்படுதலுங் கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

"அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினும் திறவதி னாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறம் தானே துறையெனப் படுமே"

என்பது செய்யுளியல். இதனால் துறையென்பது பொதுவாய்த் திணைப்பிரிவும் சிறப்பாய் அகத்திணைப்பிரிவு மென்பது பெற்றாம்.

அகத்திணைக்குச் சிறந்த கோவை நூல்களுள் அகப் பொருட் டுறைகளெல்லாம் கலிப்பாவாலேயே கூறப்படுவன. இதனாற் கலித்துறை யெனப் பெயர் பெற்றது. கலியென்பது செய்யுளையும் துறை யென்பது அகப்பொருட் பிரிவையு முணர்த் தும். கலிப்பாவாற் கூறப்படும் அகப்பொருட்டுறை யென்பது விரிந்தபொருள்,

கலிப்பாவால் அகப்பொருள் கூறப்படுதலை,

"யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது"

என்பதற்குத் தேவபாணியும் காமமுமே யன்றி வீடும் பொருளா மென்பது ஆசிரியர் கருத்தாயிற்று" என்று நச்சினார்க்கினியர் கூறுவதானும்.

கலித்தொகை யானும், கலியின் திரிபாகிய பரிபாடல்

"கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்"

எனப்படுதலானும்,

தலைவனுந் தலைவியும் உறழ்ந்துகூறும் உறழ்கலியானும் அறிந்து கொள்க.

ஆகவே, துறையென்பதற்குரிய செந்துறைப்பாடாண்பகுதி, அகப்பொருட்டுறை என்னும் இருபொருளினும் பெரும்பான்மை வழங்குஞ் செய்யுள் கலியேயென்றும், அகப்பொருளில் வரும் கோவைச் செய்யுள் அளவொத்த நெடிலடி நான்கென்றும் அறிந்துகொள்க. நச்சினார்க்கினியர் செந்துறைப் பாடாண் பகுதி யாகக் கூறிய சிந்தாமணிக் கடவுள் வாழ்த்துச் செய்யுளும் நெடி லடி நான்காகவே நிகழ்வது காண்க.

தாழிசை:

இனித் தாழிசை யென்பது கலிப்பாவுறுப்பென்பது வெள் ளிடை. அது தாழம்பட்ட ஓசையாய் வருதலாற்றாழிசையெனப் பட்டது. அது தரவகப்பட்ட மாபினதாய் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிவரும். கொச்சகக் கலியாயின் தனித்தும், பலவாயும், பிறவுறுப்பின்றியும் வரும். மூன்று தாழிசை ஒத்துவரின் ஒத் தாழிசைக் கலியாம். ஒத்தாழிசையை ஒ + தாழிசை யென்று பிரித்து ஒத்தாழிசை யெனக் கூறுது, ஒத்து + ஆழிசை என்று பிரித்து ஒத்து ஆழ்ந்த ஓசையென்றார் நச்சினார்க்கினியர்.

ஒரு தொடர்புபட்ட பொருளைக் கூறுமிடத்து, ஒத்த நியாயங்களையும் நிகழ்ச்சிகளையுங் கூறுதற்குத் தாழிசை போலச் சிறந்த உறுப்புப் பிறிதிலது.

விருத்தம்:

இனி விருத்த மென்பது யாதோவெனின் அது ஒருவகை யாப்பாம். அது தமிழில் மண்டில மெனப்படும்.

"ஒத்தாழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக் கொட்டின வென்ப"

என்னுஞ் சூத்திரவுரையில்,

"நாற்சீரடி முரற்கைபடத் துள்ளி வருதலே யன்றித் தாழம்பட்ட வோசை பெற்றும் வருமென்றார் . . இனிநாற் சீரடியாய் வருமாசிரியமும் வெண்பாவும் ஈற்றயலடியும் ஈற்றடியும் முச்சீராய் வருமென முன் விதித்தவை ஒருகால் நாற்சீராயும் வருமென்றற்கு மண்டிலயாப் பென்றார். அதுமண்டில வாசிரியப்பாவும் மண்டில வெண்பாவுமாம்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறு கோட்டுப் பெரும்பழந் தூங்கியாய் இவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

எனவும்,

"அறையருவி யாடா டினைப்புனமுங் காவான்
பொறையுயர் தண்சிலம்பிற் பூந்தழையுங் கொய்யா
னுறைகவுள் வேழமொன் றுண்டென்று என்னை
மறையற நீர் வாழிய மையிருங் குன்று"

எனவும் மண்டலித்து வந்தன" என்றார் நச்சினார்க்கினியர். மண்டலித்தல் வட்டமாதல். அது மண்டலம் என்னும் தொகைச் சொல்லிற் பிறந்தவினை. மண்டலம் மண்டிலமென மருவியும் வரும்.

மண்டலிப்பாம்பு, சுரமண்டலம், திங்கண்மண்டிலம் மண்டிலச் செலவு (குதிரைச்சாரி) முதலியன வட்ட மென்னும் வடிவுப் பொருளில் வந்தன. (தொடரும்)

பண்டைத்தமிழ் நூற்பண்பு

[திரு. K. சிவராமகிருஷ்ண நாவலர் அவர்கள்]

(கக-ம் சிலம்பு: உசு-ம் பக்கத் தொடர்ச்சி)

கொன்றை மரம் பொன் போலும் புதுமலரைப் பூத்தது என்பது இரண்டா மடியின் பொருள்: அதனால் தனித்திருந்த தலைவியின் பசலை போர்த்த பொன்மேனியைத் தலைவன் உன்னி வருந்துதல் விளம்பாமல் விளங்குகின்ற தன்றோ? செங்காந்தளின் செவ்விய மலர் அங்காந்த தென்பது மூன்றாமடியின் பொருள். அக்காட்சியால் மங்கையின் மலர்க்கரத்தை மனத் துன்னி மயங்கித் தவித்தல் அறையாமல் போதருகின்றது. ஏனைய அடிகளின் பொருளையும் எழுதி இயம்பப் புகின் ஏடிடங் தாரா தென்றிசைத்துப் பிறிது மாண்பில் புகுவாம். வாழ்க்கை இன்பத்தின் காரணப் பொருளாய் விளங்கும் காதலின் உண்மைப் பண்பையும் பண்டைத் தமிழ் நூற்கள் தெள்ளிதில் விளக்கிக் காட்டுகின்றன. காதல் ஆவது யாது? அதன் உயரிய பண்பு யாது? அஃது தோன்றுமாறு யாங்ஙனம்? என உலக நூலுலகில் வினாக்கள் எழுகின்றன. அவ்வினாக்கட்குப் பல மொழி நூற்களும் விடையளிக்கின்றனவாயினும் தண்டமிழ் நூற்கள் விடையளிப்பது உண்மை காண்போரால் பெரிதும் பாராட்டற்பாலது. "காதலாவது, வடிவும் பருவமும், குணமும், கல்வியும் ஒப்புமை உடைய இருவர் மாட்டுத் தோன்றுவதாயும், அழிவும் குறைவும் அற்றதாயும், இணையி லின்பத்தை இருவர் மாட்டும் எழுப்புவதாயும், உயரிய குணங்களின் காரணப் பொருளாயும், விளங்குவதெனத் தமிழ் நூற்கள் புகல்வது நுட்பமுந் திட்பமும் வாய்ந்ததாம். "இருவேம் ஆய்ந்த மன்றல்" எனக் குறிஞ்சிப் பாட்டில் தலைவி மொழிவதினின்றும், காதல் ஒருவர்மாட்டு நிகழ்வதன்றென்றும், இருவர்மாட்டும் ஒப்ப நிகழ்வதென்றும் உறுதியாய் விளக்கப்படுகின்றது. குறிஞ்சிப் பாட்டு காதலின் இயற்கையைத் தோழி வாயிலாய்ச் செவ்விதின் விளக்குகின்றது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியைப் போற்றிக் கூறும் மொழிகளிலும் காதலின் இன்பக்கவின் கமழ்கின்றது. ஐங்குறுநூறு, ஐந்திணை ஐம்பது முதலிய இரு சின்னூற்களிலுள்ள இரண்டு செய்யுட்கள் காதலின் பான்மையைக் கழறுதல் கருத்தூன்றிக் காண்டற் குரித்

தாகும். "காதலர் நாட்டுச் சேற்றுநீர் நம் மலைநாட்டுத் தேனோடு கலந்த பாலினுந் தீஞ்சுவை உடைத்து" எனக் காதலி இயம்புவதி னின்றும் காதலின் உயரிய பெற்றி நேர்மையில் துளங்குகின்றது. தலைவி தலைவன் கண்களைப் பொத்திய போது, அன்னோன் "காந் தட் கையால் என் விழி பொத்தியோய்! என் நெஞ்சம் விரும்பி னவர் நீ யலதும் உளர்கொல்லோ?" என ஐங்குறு நூற்றில் கழறு வது, காதலரின் அன்பின் உயர்வை விளக்கமாய்க் காட்டுகின்றது. திருக்குறளின் காதற் செவ்வியும் நேர்மை வாய்ந்ததாம். இத்த கைய பண்டை நூற்களில் வழங்கும் காதல் என்னுஞ் சொல் பிற்காலத்தில் பொருள் வேறுபட்டுப் பன்னூற்களில் காமம் என வழங்கப்பெற் றுளது. அஃது பண்டை நூற்களைப் பலபட ஆராயாத பண்பின்மையால் போந்ததே யாகும். உயரிய வாழ்க் கைக்குரிய ஒழுக்கத்தை உணர்த்தற்கும் செந்தமிழ் நூற்களே செவ்விய ஆற்றல் வாய்ந்தன. ஒழுக்கமின்றி வாழ்க்கை விழுப்ப முறாது. ஆதலின் அவ்வொழுக்கத்தை அறிவுறுத்தா நூற்கள் அரியனவென அறையப்படா. அவைகளால் ஆம் பயன் அறி யாமைக்காரிருளே யன்றி அறிவின் விளக்கமன்று. நேரிய ஒழுக் கத்தைச் சீரிய பண்டை நூற்களில் பதினென் கணக்கே பளிங்கு போல் விளங்குறப் பகர்கின்றன. திருக்குறள் ஒழுக்கத்தின் பெருக்கமாய்த் திகழ்கின்றது.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என அந்நூல் மொழிவது எத்துணை ஏற்றம் வாய்ந்தது! இல் வாழ்க்கை இனிவுறற்கு அன்போ டியைந்த அறமே ஆற்றவும் போற்றப் படுவதென்று அந்நூல் புகல்வது அருமையும், பெரு மையும் அமைந்ததாகும்.

"அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது."

பிறர் சொல்லும் இன்சொல் பெரிதும் இன்ப மளிப்பதை உணர்ந்த ஒருவன் வன்சொல் வழங்குவனோ எனத் திறம்பட நவ லும் திருக்குறட் பெருமை இருக்குமிடம் அறிஞர் அகமன்றோ?

" இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பிறரை ஒறுத்தலால் பெறுமின்பம் ஓர்நாள்; ஆயின், அது புரியாது பொறுப்பார்க்கோ அழியாப் புகழ் எனக் கூறும் அமைவும் ஆற்றவும் ஏற்றமுடையதன்றே!

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

நாலடியாரும் ஒழுக்கத்தைக் கூறும் நயம் வாய்ந்த நூலாகும். அதனாலன்றோ,

" ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டுஞ் சொல்லுக்குறுதி "

எனும் பழமொழியும் எழுந்துலாவியது?

ஆக்கள் பன்னிறம் அமைந்தனவாயினும், அவைகளின் பால் வெண்மை நிறத்திலேயே விளங்குதல் போல் உலகில் நல்வினை பலவெனத் தோன்றினும் அதன் பயன் ஒன்றே என அறிவுறுத்தும் பண்பும் அந்நூலில் அமைந்து கிடக்கின்றது. பல சமயங்களின் உட்பொருள் ஒன்றே எனும் உண்மையும் அப்பொருளில் அலர்ந்து விளங்குகின்ற தென்பதும் அறிஞர்கள் கருதத்தக்கது. அற்பர் புரிந்த அல்லலைக் குறித்து அறிஞர் சினவாரென்றும், அல்லார், தம்மையே அரியர் என எண்ணியிருப்போராதலின் நொடிக்கு நொடி சினம் மிக்கு நெட்டைத் தூணில் முட்டிக் கொள்வரென மொழியும் பான்மையும் முழுதும் நேரியதாகும்.

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி உரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்"

அரசியல் புரக்கு மாற்றையும், அரசினோ டொழுகு மாற்றையும் உரைசால் திருக்குறள் புரையறப் புகல்வது புகுந்து நோக்கிப் பொன்னே போல் போற்றத்தக்கதாகும். சாணக்கிய நூலினும் சால்புசான்ற நூலாய் அரசியல் அமைவை அழகுறப் பகர்கின்றது. ஆங்கில அரசியல் நூற்களினும் அரிய நேர்மையில் அரசி

யல் ஆக்கத்தை அந்நூல் புகல்வது அறிஞர்கள் ஆழ்ந்து கூர்ந்து நோக்கத்தக்கது. முதுமொழிக்காஞ்சியின் முதிய நீதிகள் பேதையரையும் பேதையாக்கும். செந்தமிழ்க் காப்பியங்களின் செம்மையும் மும்மைசாலுலகில் மெய்ம்மை சான்றதாகும். காப்பியவிலக்கணம் காப்பியரால் கழறப்பெற்றதாயினும் அதன் உண்மை, உலகநிலையை ஓவியம்போல் காட்டி, அதனுண்மைப் பயனை அறிவுறுத்துவதாகும்.

நாடகக் காப்பியங்களில் பெரிதும் இப்பண்பு பெருகி இருத்தல் வேண்டும். சிலப்பதிகாரத்தில் நாடகத்தமிழுஞ் சேர்ந்திருப்பதால் காப்பிய இலக்கணம் கவின்பெறக் கமழ்கின்றது. பண்டை நாடகக் காப்பியமாய்த் தண்டமிழுலகில் திகழ்வது சிலப்பதிகாரமென்ற சீர்மைசான்ற நூலொன்றேயாகும். இந்நூல் கற்கும் போது முன்னே நிகழ்வது போன்றே நிகழ்ச்சிகள் நேர்மையாய் நவிலப்படும்: நூலின் நடையும் நுட்பநுவற்சி நிறைந்ததாகும். காதை இறுதியில் மேதினியோர்க்கு மூதறிவைக்காட்டும் நீதிமொழிகள் ஓதற்கியலா ஒண்மை வாய்ந்தனவாகும். மணிமேகலையும் இதனோடொத்த மாண்பு பூண்பதாகும். சிறிய சொற்களில் அரிய பொருள்கள் செறிந்து விளங்கும் செவ்வி பண்டை நூற்களில் பரந்து பொலிகின்றது. இதனுண்மையை இனிய பாவொன்றால் முதன்முதலில் விளக்கினம். உள்ளதை உள்ளவாறே தெள்ளிதில் விளக்கும் உயரிய கலைமாண்பு தண்டமிழ்க்குப் பண்டை நூற்களாலே பெறப்படும். பிற்போந்த கற்பனை வனப்பில் பொருளும் பயனுமில்லை யென்றே புகல்வேம். கற்பனை பகர்வார், கழறும் பொருளின் காட்சியினுண்மை மறந்து கண்டவழி பெருக்கியுரைத்தலே காமருடைத்தெனக் கருதினர் போலும்! இதனை உணர்ந்தன்றோ மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும்,

> "பத்துப் பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே"

எனக் கழறிப் போந்தார். ஆதலின், பண்டைத் தண்டமிழ் நூற்கு, பிற்பட்ட நூற்கள் ஒன்றும் ஒப்புமை ஆகாதென்றும், எம்மொழி நூற்களும் இம்மணி நூற்களின் செம்மைசால் செவ்விக்குச் சிறிது மிணையாகா தெனவுங் கூறி இக்கட்டுரையை இத்துடன் முடிக்கின்றும்.

மொழிபெயர்ப்பு-Translation

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் M.A.,B.L.]

பூதஞ்சேந்தனுர்

இயற்றிய

இனியவை நாற்பது

கடவுள் வாழ்த்து

க. கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

Of Pleasant Things: Forty (Stanzas)

by

Bhuthan Senthanar

1. It is very pleasant to attain to the feet of thethree-eyed God (Siva); it is pleasant to worship Vishnu who wears the old-time sacred Tulsi garland; it is pleasant to go forth and propitiate the four-faced god (Brahma).

நூல்

உ. பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகவினிதே
நற்சவையிற் கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

2. It is pleasant to be educated even if one has to beg for it; it is very pleasant if the learning is helpful to one in an assembly of the learned; it is pleasant to hear the soft words of those who smiling display teeth like pearls; it is also pleasant to befriend the great.

ங. உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணுதா மாயி

னில்லயாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

3. The gift of a rich man is pleasant; if both parties get on agreeably, domestic life is very pleasant; otherwise think of the instability of fortune and without delay turn ascetic; that alone is pleasant.

ச. ஏவது மாறு விளங்கிளமை முன்னினிதே
நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கோ ணட்புத் திசைக்கு.

4. It is pleasant to have children that do one's bidding without demur; it is pleasant to study daily and refrain from evil; pleasant the husbandry of a peasant who owns his own bulls; and if one thinks of it, it is very pleasant to have friends in the direction in which one proceeds.

ரு. யானை யுடைய படைகாண்டன் முன்னினிதே
யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

5. It is very pleasant to see a troop of elephants; it is very pleasant not to feed one's flesh with other flesh; it is pleasant to live in a town on the bank of a forest river; it is pleasant too to be respected by men of honour.

சு. கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயஞ்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

6. Not to kill is pleasant; not to swerve from justice is pleasant to the King; to be a just king is pleasant indeed; not to speak harm or bear tales against anyone is good also.

எ. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளெல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

7. To do good to the extent possible to one is pleasant; the words of wisdom from those who are on the right path are pleasant; it is pleasant to get the help of those who are free from fault and honourable.

௮. அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாக லினிது.

8. For Brahmins it is pleasant not to forget the Vedas; the prowess of a relation is pleasant; it is pleasant not to listen to the words of one without discipline or self-control even if he be a father.

௯. ஊருங் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டன் முன்னினிதே
ஆர்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறார் கேட்ட லினிது.

9. It is pleasant to have a strong horse to ride on; it is pleasant to kings to see at times of war, elephants like dark mountains, getting ferocious; it is pleasant to see the affectionate, listening attentively to words of wisdom.

௰. தங்கணமர் புடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

10. To see all one's dependants prosperous is very pleasant; see the widespread moon-light fill the beautiful heavens is pleasant; to be faultless in one's conduct and to be kind to all is pleasant indeed.

௧௧. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதவரை யஞ்சி யகற
லெனைமாண்புந் தானினிது நன்கு.

11. It is pleasant to see people prospering without getting into debt; it is pleasant to drive away unchaste women; it is most pleasant to keep away from those who have not nobility of mind.

கஉ. அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே
உயிர்சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில்.

12. It is pleasant not to go about from town to town begging for one's food; scholarship that does not show itself in quiddities and oddities is pleasant; to refrain from going to one's enemies for help even when one is dying of starvation is good.

கங. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றே லினிது.

13. Pleasant it is to have a baby growing up free from illnees; pleasant also the learning of one who is not afraid of an audience; pleasant is the prosperity of the noble minded, if it is stable and pure.

கச. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

14. It is not good to outlive one's honour; it is pleasant to live within one's means and save one's status from ruin; to possess much spotless wealth is pleasant to all men.

கரு. குழவி தளர்நடை காண்ட லினிதே
அவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாக லினிது.

15. It is pleasant to see children stumbling in their walk; it is more pleasant than nectar to hear their babble; it is pleasant to be brave when death comes and frowns on one.

கசு. பிறன்மனை பின்னேக்காப் பீடினி தாற்ற
வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையுண் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட வினிது.

16. It is pleasant not to be gazing at another's wife ; rain showers are pleasant to parched up crops ; it is pleasant for valorous kings to have at their gates big mountain-like elephants and hear them roaring with joy.

கஎ. கற்ருர்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

17. To discuss wise matters before the wise is pleasant ; to associate with the great is very pleasant indeed ; to give away rather than beg is by all considerations very proper and pleasant.

கஅ. நட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையு
மொட்டாரை யொட்டிக் கொளலதனின் முன்னினிதே
பற்பல தானியத்த தாகிப் பலருடையு
மெய்த்துணையுஞ் சேர வினிது.

18. To do good to one's friends is pleasant ; pleasant to make friends with those who will never join one's enemies ; pleasant to have a fort stored with various grains and impregnable to one's enemies.

கக. மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழுந் தவசிகண் மாண்பினிதே
எஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை யினிது.

19. In the world that is the best spot where wise people live ; the nobility of the ascetic who lives according to the laws ordained by the Sastras is most pleasant ; more pleasant too to call upon and worship early in the morning one's own worthy parents.

———

(தொடரும்)

நகையும் உவகையும்
Wit & Humour

கூடுவிட்டுக் கூடுபோய்தல்

[மகிழ்நன்]

(கக-ம் சிலம்பு கடுஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வந்திரட்டுதல், இன்பம்நுகர்தல், சுற்றந்தாங்கல் ஆகிய இவற்றில் மூழ்கிக்கிடந்து, வாழ்க்கையின் வேறுபகுதிகளை மறந்திருக்கும் உயிர் கூட்டில் அடைபட்டதாகுமென்பதை முன்னர் எடுத்துக் காட்டினோம். வேறு சில கூடுகளையும் இப்பொழுது பார்ப்போம்.

குடும்பத்திற்கு அடுத்தபடியில் வருகின்ற கூடு, ஒருவர் பிறந்த குழு அல்லது குலமாகும். இக்கூடு நமது இந்திய நாட்டில் மிக வன்மையுடையதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. பிற நாடுகளில் இதைக் காண்டலரிது. இந்நாட்டில் தோன்றிய மேன்மக்கள் பலர் இக்கூட்டின் வன்மையையும் வெம்மையையுங் கண்டு அதை உடைத்தெறிய முயன்றனர். அவர்கள் முயற்சி பயன்படவில்லை. குலமாகிய கூட்டிற்குள்ளிருந்து எல்லாவற்றையும் நோக்கும் ஒருவர் எங்ஙனம் நெறி திறம்பாது வாழ்க்கை நடாத்தல் கூடும்? ஒரு குலத்துக் கொருநீதி வகுத்தல் தகுமென்று வாதாடுவார் இன்று முளர். தெளிவுபெற்ற அறிவுடையார் இதை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளார். குலநீதி பேசும் அவர்கள் தாமும் வாழ்க்கையை மாணவப்பருவம், இல்லறநிலை, வனத்தில் தவஞ்செய்தல், துறவு எனநான்கு கூறுக்கி இறுதியதாகிய துறவில் குலக்கூட்டிலிருந்து நீங்குதல் வேண்டுமென்று மொழிகின்றனர். வயதுமுதிர்ந்த நிலையில் தழுவப்படவேண்டுமென்று அவர்கள் கூறும் துறவின் பண்பாகிய குலக்கூட்டின் நீக்கம் ஏனைய மூன்று நிலைகளில் நிகழுமாயின் மக்கட்கூட்டத்தில் குழப்பம் உண்டாகி அழிவு நேர்தல் திண்ணமென்று பகர்கின்றனர். அற்றாயின் குலக்கட்டிலாத வேறுநாடுகள் அழிந்திடல்வேண்டுமன்றோ? அவ்வாறு நிகழக்காண்டிலம். ஆதலின் குலக்கூட்டிலிருந்து வெளிப்படுதலைக் கூடிய விரைவில் கைக்கொளலே நன்று. குலத்துக்

கொரு நீதி வகுப்பதால் மக்கட்டன்மை இழிவடையுமேயன்றி உயர்ந்து விளங்காதென்பது உறுதி..

குலத்திற்கடுத்த நிலையில் வருங்கூடு நாடு ஆகும். இயற்கையாகவோ செயற்கையாகவோ அமைக்கப்பட்ட சில எல்லைகளுக்குட்பட்ட ஒரு நிலப் பரப்பில் வாழ்கின்ற மக்கள் நாளாவட்டத்தில் ஒரு மொழியைப் பேசும் இயல்பினராகின்றனர். இதுபற்றி அவர்களுக்குள் ஓர் இயைபுண்டாக, அவர்கள் தம்மை மற்ற மக்களினின்றும் வேறுபடுத்தித் தமது நலம்வேறு, பிறர் நலம் வேறு என்றெண்ணத் தொடங்கிவிடுகின்றனர். ஒரு மொழியைப் பேசும் மக்கள் தாமும், நிலத்தெல்லைபற்றி வெவ்வேறு பகுப்பினராய் நின்று ஒருவரை யொருவர் தாக்குவதுமுண்டு. தமிழ் மக்கள், சேரநாட்டினராகவும், சோழநாட்டினராகவும், பாண்டி நாட்டினராகவும் பிளவுபட்டு நின்று ஒருவரோடொருவர் இயற்றிய கடும்போர்களின் முழக்கம் பண்டைத்தமிழ் நூல்களில் இன்றளவும் கேட்கின்றது. அப் போர்களால் நேர்ந்த அழிவையுந் தீமையையும் தமிழறிந்த எவரும் எண்ணி இரங்காதிரார்.

ஐரோப்பாக்கண்டத்தில் ஏறக்குறைய ஒரேமதமும் நாகரிகமுமுடைய மக்கள், ஆங்கிலர், ஜர்மானியர், பிரான்சியர், இத்தாலியர், இஸ்பானியர் என்ற பல நாட்டினராகவும் சமூகங்களாகவும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவினரும் தங்களுடைய நலம் மற்றவர்களுடைய நலத்தினின்றும் வேறுபட்டதென்று பிழைபடவெண்ணிப் பலவாண்டுகளாக நீர்ப்படை, நிலப்படை முதலியவற்றை ஒருவரறியாமல் ஒருவர் பலப்படுத்திக்கொண்டு சென்றதனாலன்றோ 1914-ல் போர் முழக்கங் கிளம்பிற்று? அந்த நனிபெரும்போரால் பிறந்த பயனன்றோ இந்நாளில் உலகெங்குங் குழப்பமும் வறுமையும் மிகுந்திருப்பது? மக்களெல்லோரும் ஒருவரே, ஒருவர்க்கு வருந் தீமை மற்றவரையும் பற்றும், பிறர்நலமே நமது நலம், எனும் உண்மைகளைக் கடைப்பிடித் தொழுகுவதற்குத் தடைகளாக நிற்கின்ற நாட்டுப்பகுப்பும் சமூகப்பகுப்பும் ஒழிந்தாலன்றி உலகம் அமைதிபெறுதென்பதை நடுவு நிலைமையும் நல்லறிவும் வாய்ந்த மக்க ளெல்லோரும் உணருகின்றனர். இதனால், இப்பொழுது ஒரு கேள்வியை முடிப்பதற்கு உலகிலுள்ள நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடுவது வழக்கமாகிவருகின்றது. இத்தகைய கூட்டங்கள் பெருகப் பெருக மக்களெல்லோருக்கும்

ஒரே துரைத்தனம் ஏற்படுத்தலுங்கூடும். அந் நந்நாள் கடிதில் வருமாறு மாசகன்ற மனத்தார் உழைத்திடுவாராக. இதுகாறும் புகன்றதிலிருந்து நாடுங் கூடாமென்பது தெளிவாகின்றதன்றோ?

இங்ஙனம் ஒருமகனது உயிர் அடைபட்டிருக்கக் கூடிய கூடுகள் பலவாம். இவற்றிலிருந்தெல்லாம் உயிர்வெளிப்படுமாயின் அஃது இறைவன், உலகு, உயிர் என்ற முப்பொருள் உண்மை காணப் பக்குவம் வாய்ந்ததாகும். ஆராய்ச்சிக்குரியன இவை மூன்றே. இவ்வாராய்ச்சியே உயிரைக் கூட்டிலிருந்து வீட்டிற் புகுத்தும்.

இனி, மற்றொருவகையிற் கூடுவிட்டுக் கூடுபாய்தலைக் காண்போம். குமரகுருபரரியற்றிய செய்யுள் ஒன்று ஈண்டு நினைவிற்கு வருகின்றது.

"மலரவள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்பது அச்செய்யுள். இதில் நான்முகனாற் படைக்கப்படும் மக்களுடம்பைப் புலவோரால் இயற்றப்படுஞ் செய்யுளுக்கு ஒப்பிட்டு, முந்தியது அழியுமென்றும், பிந்தியது அழியாதென்றும் நுவலப்பட்டுள்ளது. புலவர் தமது அழகிய கருத்துக்களை ஆய்ந்தெடுத்த நறுஞ்சொற்களிற் புகுத்தி அமைக்கும் பாடல்கள், மக்கள் உடம்பை ஒத்தனவே. ஏனெனின், கட்புலனாகாத கருத்துக்கள் ஏறி நிற்குஞ் சொற்களைப்போல் உயிரேறிய உடம்பும் உளது. கருத்திற்கேற்பச் சொல்லை அமைப்பர் ஆழ்ந்தகன்ற அறிவினை உடையோர்; சொல்லால் இழுப்புண்டு கருத்தைக் கைவிடுவர் கற்றும் அறிவில்லார். கருத்திற்கேற்பச் சொல் அமைவதுபோல் உயிருக்கேற்ப உடலும் அமையும். உள்ளிருக்கும் உயிர் கல்வியாலும், நல்லிணக்கத்தாலும், ஆராய்ச்சியாலும் அழகுபெறப் பெற, அதற்குறைவிடமாகிய உடலும் ஒளியுந் தூய்மையும் அடைகின்றது. இதுபற்றியன்றே, 'அகத்தினழகு முகத்தில் விளங்கும்' என்பது. அதிவீரராம பாண்டியர் தமது நைடதத்தில்,

"நல்லெழில் பகருமுன் னூலோர்
இலங்கெழிலளவு குணமென உரைப்பர்"

(நைடதம்: அன்னத்தைத் தூதுவிட்டபடலம்-31.)

என்று கூறினர். ஈண்டு, அழகைக்கொண்டு குணம் துணியப் படுமென முன்னூலோர் மொழிந்தனரென்று கூறப்பட்டது. 'எழில் பகரு முன்னூலோர்' கூறுவது அவ்வாறாயினும் பிற வாசிரியர் அகத்திற்கேற்கவே முகம் அமையுமென்று விளம்பினர். எங்ஙனமாயினும், அகத்திற்கும் முகத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பை மறுப்பார் எவருமிலர். இறைவனல் வகுத்துக் கொடுக்கப்பட்ட இவ்வுடப்பாகிய கூட்டை ஏற்றவாறு திருத்தவும் உயிருக்குத் திறமையுண்டாதலின், ஒருவன் தன் வாழ்நாள் முடியு முனமே ஒருடம்பையே வெவ்வேறு தன்மையுள்ள கூடுகளாக மாற்றுதல் கூடும். நிற்க.

புகழ்படைத்த பெரிய நாடக ஆசிரியர்களெல்லாம் தமது உளத்திட்பத்தினல், ஊனுடம்பில்லாத மக்கள் பலரைப் படைத் திருக்கின்றனர். நாடக ஆசிரியர்களே யன்றி கற்பனைக்கதைகள் எழுதுவோரிற் சிறந்தோரும் இவ்வாறு செய்திருக்கின்றனர். ஆங்கிலப் புலவர்பிரானன ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்களில் அவர் எத்தனை மக்களை உண்டாக்கி யிருக்கின்றனர்! (Tolstoy) டால்ஸ்டாய், விக்டர் ஹியூகோ, (Victor Hugo) எனும் இரு புலவரும் தாம் எழுதிய கதைகளிற் படைத்திருக்கும் மக்கள் எத்தனைபேர்! இங்ஙனந் தோற்றுவிக்கப்பட்ட மக்களை நினையுங் கால்,

"—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றவர் செய்யு முடம்பு"

என்பதற்கு மற்ருெரு பொருளுந் தோன்றுகின்றதல்லவா?

புலவர்களாற் படைக்கப்பட்ட இம்மக்கள் யார்? உயிருட னிருப்பவர்களைக் காட்டினும் இவர்கள் மிகத் திண்மை வாய்ந்தவ ராய் விளங்குவது என்ன விந்தை! இவர்கள், தம்மைப் படைத்த புலவனின் வேறு உருவங்களன்றி வேறென்ன? நூலியற்றும் புலவன் தனது ஆற்றலால் வெவ்வேறு தொழிலும் வயதும் அறிவு நிலைமையுமுடைய மக்களைப்படைத்து அவர்களுட் புகுந்து நின்று பேசுகின்ருன், பாடுகின்ருன், வினை நிகழ்த்துகின்ருன்; இது கூடுவிட்டுக் கூடுபாய்தல் ஆகாது. ஆனல், கூட்டிலிருந்து கொண்டே பல கூடுகளிற் பாய்வதாகும். மனேன்மணீய ஆசிரியர், குடிலன், நடராஜன், வாணி, நிஷ்டாபரர், கருணுகரர் ஆகிய பல மக்களை உண்டாக்கி யிருக்கின்றனர்.

'மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்'

ஒவ்வான், ஒவ்வான்.

கூடுவிட்டுக் கூடுபாய்தல் நிகழும் பிறிதொரு வகையைக் காண்போம். கூடுவிட்டுக் கூடுபாய்தலில் இரண்டு நிலைகள் உள. இவற்றுள் முதலது கூடுவிடுதல், அதாவது, தான் குடி கொண்ட வீட்டிலிருந்து அல்லது கூட்டிலிருந்து உயிர்வெளிப்படுதல் இருந்த இடத்தைவிட்டுப் பெயராது ஒன்று வேறோரிடஞ் செல்லு மென்பது யாண்டும் இசையாது. இருந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்தே மற்றோரிடம் ஏகவேண்டும். இடம் விட்டு இடம் பெயர்தல் புடை பெயர்ச்சி எனப்படும். தமிழ் இலக்கணத்தில் இடங்கள் மூன்று; அவை தன்மை, முன்னிலை, படர்க்கை எனப் பெயர்பெறும். தன்மை 'நான் ' என்பதாலும், முன்னிலை 'நீ' என்பதாலும் படர்க்கை 'அவன்' என்பதாலும் உணர்த்தப்படும். தன்மை எனுஞ்சொல் 'தான்' என்ற முதல் நிலையிலிருந்து வருவது. 'தான்' என்பது அகங்கரித்தலைக் குறிக்கும் (கரித்தல்=மிகுந்து நிற்றல், உப்புக்கரித்தல் என்பதையொக்க.) தான் நான் யான் எனும் மூன்று சொற்களும் பொருளொற்றுமையுடையன. இவற் றிற்குள்ளவேற்றுமையாதெனின், முதற்சொல்லில் வல்லெழுத் தும், இரண்டாஞ்சொல்லில் மெல்லெழுத்தும், மூன்றாஞ்சொல்லில் இடைஎழுத்துந் தோன்றுவது தான். திட்பமுடையதாகிய வல் லெழுத்து ஆணவத்தைக் குறிப்பது சொல்லாதே போதரும். இஞ் ஞான்று வழங்கும் பேச்சிலும் ஒருவனது அகங்காரத்தைச் சுட்டுங்கால் நான், யான் என்ற சொற்களை விலக்கி, 'தான்' என்பதை ஆள்கின்றோம். 'தான்' என்ற கர்வம், 'தான்' என்ற பெருமை, 'தான்' என்ற ஆணவம் என்று மக்கள் பேசுவதை இன்றும் கேட்கின்றோம். இதனால் நாம் அறிவது யாது? தான் என்ற தன்மை நிலையில் இருக்கும் உயிர் ஆணவத்தில் அழுந்திக் கிடக்கும். அது தன்னை முன்னிலைப்படுத்தி நோக்கவும், படர்க்கை இடத்தில் வைத்துப் பார்க்கவும் இயலாததாகின்றது. எதை நினைத்தாலுஞ் செய்தாலும் 'நான்' என்பதை விட்டகலாத உயிர்க்குப் புடை பெயர்ச்சி கிடையாது. அது தோன்றியவிடத்தி லேயே கிடந்து கீழே செல்லும் உயிராகும். இதுபற்றியே நான், எனது, என்ற இரு பெரும் பற்றுக்களாற் கட்டுண்ட உயிர்க்கு உய்வில்லை என்றார் சான்றோர். கட்டுண்பதும் கூட்டிலடைபடுவ

தேயாகும். ஆதலின், தன்னைவிட்டு நீங்குதல் உயிரின் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுமென்று தெளிக. உயிர் நீங்கியபின் யாதும் பயன்படுதலின்றி மண்ணாகிற கூட்டை நீக்கி வெளிவந்து இயங்கும் ஆற்றல் பெறாது அடங்கிக் கிடக்கும் உயிரினும் இரங்கத்தக்கது வேறொன்றில்லை. கூடுவிடுதல்பற்றி இவ்வளவு சாலும்.

இரண்டாவது; கூடுபாய்தல், அதாவது பிற கூடுகளிற்புகுதல். ஈண்டுப் பாய்தல் என்பதற்குக் குதித்தல் என்று பொருள் கொள்ளாது பெருகிச்செல்லல் என்று கோடல் வேண்டும். (வயலுக்கு நீர் பாய்கிறது என்றாற்போல்). தன்மை இடத்தில் நின்ற உயிர், முன்னிலை, படர்க்கையாகிய ஈரிடத்திற்கும் செல்லக்கூடுமாயின், அது கூடுவிட்டுக் கூடுபாய்தலேயாகும். பிறர்துன்பங் கண்டு அதைத் தமது துன்பமாக நினைத்து வருந்தக்கூடியவர் தன்மை இடத்தை விட்டுநீங்கிப் படர்க்கை இடத்திற்குப் போகின்றவரன்றோ ? இப்பெற்றியுடையாரே உலகைச் சீர்திருத்தினவர், திருத்துகின்றவர், திருத்தப்போகின்றவர். இவர்களே மக்களுக்கு நேரும் இன்ப துன்பங்களைத் தம்முடையனவாகக் கருதி, ஒன்றைநீக்கி மற்றொன்றைப் பெருக்கமுயலுகின்றவர். அன்பாகிய வெள்ளம் ஒருவனது உள்ளத்திலெழுமாயின், அது அவனை நான், எனது என்ற ஒடுங்கிய நிலைகளிலிருந்து வெளியே ஈர்த்துக்கொண்டு சென்று பல்லுயிர்களின் உளநிலைகளையும் அவனுக் கறிவிக்கும். ஒருவன் மற்றோருயிரின் உணர்ச்சியொடு தன்னை ஒன்றுபடுத்திக் கொள்வானாயின், அவன் தன் கூட்டிலிருந்து நீங்கி அதன் கூட்டி லிடங்கொள்கின்றான். இதுவே கூடுவிட்டுக் கூடுபாய்தலாகிய அரிய ஆற்றலாவது கண்டுகொள்க.

அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

வரலாற்றுப் பகுதி:
History & Biography.

திருவிதாங்கூர் ஓவியப் பெரும்புலவர்
இராஜா இரவி வர்மர்

[திரு. S. ஈசுவரமூர்த்தியாபிள்ளை யவர்கள், ஓவியப்புலவர்]

(ஸ்ரீ ஈசுவர ஓவியப்பள்ளி, பாளையங்கோட்டை)

"மலரினில் நீல வானில் மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை யீசன் இயற்றினன் சீர்த்தி யிந்த
வுலகினி லெங்கும் வீசி யோங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணு லனைத்தையு நுகரு மாறே."

(பாரதியார்)

இயற்கை யன்னை எழில்பெற இலங்கும் நாடு சேரநாடு. இது, நீலத் திரைக்கடல் ஒரு மருங்கும், மஞ்சுசூழ் மலைத்தொடர் மறுமருங்கும் வாய்ந்தநாடு; மலைவீழருவியும், நீர்மலிந்த யாறுகளும் நிறைந்த நாடு; நெடுநல் ஏரியும், கைப்பணிக் கால்களும் திக்கெங்கணுஞ் சீரணி செய்யும் நாடு; பரிதியின் கதிர்கள் பார்மீது படாது தடுத்து நிற்குந் தென்னை, பலா, கமுகு, வாழை, மா முதலிய மரப்பொழில்கள் செறிந்த நாடு; பச்சைப் பசுங்கிளியும், கீதமினிய குயிலும், வரிவண்டினமும் இன்னிசை யெழுப்பும் நாடு; பஞ்சின் மெல்லடிப் பாவையர் பலரும், தமிழ்மொழி பயந்த கவின்மலையாளச் சுவைபெறு சோபனம் நயம்பட வியற்றும் நிகரில்லா வஞ்சிநாடு.

அழகெனுந் தெய்வம் இன்ப நடம்புரியும் இந்நாட்டிற் றோன்றிய பாவலரும், இன்னிசைப் புலவர்களும், ஓவியம் வல்லாரும் பலர். அறிவாற்றலிற் சிறந்த பெரும்புலவர் மணிகளுள், ஓவியம் வளர்த்த சீரியச் செல்வர்கள் கிளிமானூர் கோயிற்றம்பிரான் என்னும் அரச குலத்தினர். அக்குல நந்தாமணி விளக்காய்ப் பாரெங்கும் புகழொளி வீசி நன்னரோவியங்கள் தீட்டி நல்கிய பெருமான் இராஜா இரவி வர்மர். இம்மா பெரும் ஓவிய மணியை உலகினி லறியா தாரிலர். மன்னர் மாளிகைகளிலும், ஏழை மக்கள் குடிசைகளிலும், வணிகச் செல்வர் மளிகைகளிலும்

மாண்புற விளங்கும் செம்மை சால் ஓவியங்கள் இவர் பெயரை என்ஞான்றும் நினைவூட்டுகின்றன. ஒல்காப் புகழ்பெற்ற ஓவியப் பெரியாரின் சீரிய வாழ்வை நம் நாட்டுமக்கள் நன்கறிதல் நன்றன்றோ?

பலநூற்றாண்டுகளாகத் திருவிதாங்கூர் அரசர்களாற் போற்றப்பட்ட ஓவியப் புலவர்களுள் மிக்க புகழ்பெற்றவர் கிளிமானூர் இராஜ இராஜ வர்மா. இவர் மாணவர்களில் தலை சிறந்தவர் நமது இராஜா இரவி வர்மரே. இரவி தன்னிளமைப் பருவத்தே, உள்ளூற வூறித் ததும்பி நின்ற ஓவியச் சுவையை, கையிற் கிடைத்த கரித்துண்டுகளால் தரைமீதும் சுவர்மீதும் தெற்றிமீதும் ஓவியங்கள் வரையலாயினர். அச்சுவை இராஜ இராஜ வர்மாவாற் பெரிதும் வளர்க்கப்பட்டு, இரவி வர்மரை ஓவியத்துறையில் தனி உயர் நிலையில் நிறுவியது. பின்னையோர் புகழ் அன்னையோர் ஆக்கமே.

இரவி மணியின் காலத்திற்குமுன் திருவிதாங்கூரில் எண்ணெய் ஓவியங்கள் கிடையா. இவரே இதனை முதன்முதற் றொடங்கினவராவர். அற்றை நாள் அந்நாட்டைக் காணச் சென்ற தியோடோர் ஜேன்சன் (Mr. Theodore Jenson) என்ற ஆங்கில ஓவியப் புலவர் இவ்வினையியற்றுந் திறனை இவருக்குக் கற்பித்தார். இவர் வாணாளில் புதியதோர் ஊக்கத்தை யளித்ததும் இவ்வோவியத்திறனே. பன்னாட் பழக்கமும், எந்நாள் முயற்சியும், தூண்டு சுடரேபோல் இவர் கைத்திறனை விளங்கச் செய்தன.

1874-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற கவின்கலைப் பொருட்காட்சி (Fine Arts Exhibition at Madras) யில், நாயர் நல்லாளின் ஒப்பனையை இரவிவர்மர் நீவியக் கிழியில் தூரியங்கொண்டு மிக அழகிதாய் எழுதிய படம் ஒன்று, கவர்னர் துரையவர்களின் தங்கப் பதக்கத்தைப் பெறச் செய்தது. "வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு" என்ற முதுமொழிக்கிணங்க அரசியல் ஓவியப்புலவராகிய இராமசாமி நாயுடு என்ற பெரியார் இவர் திறமைக்குச் சிறிதுந் தாழாது தலைதூக்கி நின்றனர். ஆனால், இவ்விருவரின் ஓவியப் போக்கைத் துருவி ஆராய்ந்த வல்லுநர்கள் நாயுடு அவர்கள் மக்களுருவச் சாயல் (Portrait) வரைதலில் மேம்பட்டவரென்றும், இரவிவர்மர் கற்பனை ஓவியங்கள் தீட்டுதலிற் றேர்ந்தவரென்றும் கண்டார்கள்,

பெரும்புலவராம் காளிதாசரியற்றிய "சாகுந்தலம்" எனும் உயரிய நாடக நூலில், தலைவி சகுந்தலை தலைவன் துஷ்யந்தனுக் கெழுதிய காதற் கடிதத்தின் அகப்பொருட்டுறையைக் கவின் பெற அமைத்து வரையப்பட்ட ஓவியம், 1878-ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை கவின்கலைக் காட்சியில், கவர்னரின் பொற் பதக்கத்தை முதற் பரிசிலாகப் பெறச் செய்தது. அதன் கவின் கலைத் திறனைக் கண்டு மகிழ்ந்த அம் மாகாணத்தலைவராம் (Duke of Buckingham) பக்கிங்ஹாம் பிரபு பெரும்பொருள் வழங்கி அதனை வாங்கினர். அடுத்த ஆண்டில் அரசாங்க மாளிகை (Government House)க்கே அப் பெருமானின் உருவப்படத்தை வரைந்துதவும் நற்பணி இரவிவர்மர்க்கே கிடைத்தது.

இது முதற்றான் வர்மர்க்குப் புராணங்களிலும் இதிகாசங் களிலும் வரும் நற்கருத்துக்களை ஓவியங்களில் வரைந்து, புகழ் பெறக் காலம் வாய்த்தது. திருவிதாங்கூர் மன்னர் விசாகம் திருநாள் அவர்களால் ஏவப்பெற்று "இராமர் புறக்கணித்த சீதை" (Sita's ordeal of Banishment by Rama) என்ற ஓவியத்தை உயிருடன் ஒளிர்வதே போன்று இவர் சமைத்தார். இவ் ஓவியக் கவின்சிறப்பே இவரை பரோடா அரண்மனைக் கழைத்துச் செல் லக் காரணமாயிருந்தது. ஆண்டுறைந்த நான்கு திங்களில் இவர் தீட்டிய உருவப் படங்கள் பல. இவர் தலைசிறந்த ஓவியப் பெரும் புலவரென்ற பெயர் நாடெங்கும் பரவியது. இவரது ஓவியப் பணியை நாட்டிலுள்ள மக்கள் பலர் விரும்பினர்கள்.

1890-ஆம் ஆண்டில் பரோடா அரசியலுக்கு இராமாயண காவியங்களின் வரலாற்றுத் துண்டுகளைப் பொருளாகக் கொண்டு பலரும் விரும்பத்தக்க வகையில் 14 படங்கள் வரைந்து உதவினர். இவரது ஓவியப் பணிக்குத் துணைபுரிந்தவர்கள் ஸி. இராஜ இராஜ வர்மா என்ற இவரது உடன்பிறந்தாரும், உடன்பிறந்தாளுமா வர். இவர்களுதவியுடன் வெளிவந்த படங்கள் பலவும் மாசிலா மணிகளாய்த் திகழ்ந்தன. அக்காலை, "தான் பெற்றபேறு யிவ் வையகம் பெறுக" என்ற பெருநோக்கங்கொண்ட இராஜா ஸர். டி. மாதவராவ் அவர்கள் பரோடாவிலிருந்து இரவி வர்ம ருக்கு வரைந்த கடிதம் ஒன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார்:— "என்னுடைய நண்பர்கள் பலர் நும் சீரிய ஓவியத்திறனைக் கண்டு மகிழ்ந்து அவர்கள் வேண்டுமென்று விரும்புகிற பெருந்

தேவையை நீர் ஒருவரிருவர் துணைகொண்டு வரைகின்ற ஓவியங்களால் நிறைவு செய்ய முடியாது. ஆதலின், நும் ஓவியங்களிற் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றை ஐரோப்பாவிற்கனுப்பி அவற்றிலிருந்து பல் ஓவியப் படிகள் அச்சிடுவித்து வருவித்துத் தேவைக்கு வழங்குவது பொருத்தமாயுள்ளது. அதன் வாயிலாய் நும்புகழ் பரவுவதுமன்றி நீவிர் நும் நாட்டிற்கு நற்பணி செய்தவருமாவீர்." இக்குறையை நீக்குவான் வேண்டி பம்பாயில் ஐரோப்பியர்களின் மேற்பார்வையில் படங்களின் படிகள் எடுக்க ஓர் அச்சுப் பொறி நிறுவப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள பல ஓவியக் கூடங்களிலும் அழகொழுகக் காணப்படும் அவருடைய ஓவியங்கள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவது மிகையாகாது. திருவனந்தபுரம் மகாராஜா ஓவியக் கலா சாலையிலுள்ள படங்கள் ஐந்து: அவைகள், "தமயந்தியும் அன்னமும்" "உருக்குமாங்கதனும் மோகினியும்" "சகுந்தலாவும் கௌதமியும்" "கீசகனும் திரௌபதியும்," "திரௌபதியும் சிம்ஹிகையும்" என்பன. நான் அக்கலாசாலையில் ஓவியக்கலை பயின்று வரும்நாளில் இப்படங்களே நாடோறும் என் கண்வழிச் சென்று என் கலைப்பயிற்சிக்குப் புத்துயிரையும், செவ்விய சுவையையும் ஊட்டின. இவற்றை நோக்கியபின் இவற்றின் படிகளைப் பார்வையிடில் இப்படிகள் ஆயிரம் மடங்கு அழகு குறைந்தே தோன்றுகின்றன. ஏனையோர் முடிபும் என் கருத்தை யொத்திருந்தது. "ஆலையில்லா வூருக்கு இருப்பைப்பூச் சர்க்கரை" என்பதே போன்று, குவியல் குவியலாகப் பணமருளி இரவி வர்மா கைப்பட வரைந்த ஓவியங்களை வாங்க இயலாத பொதுமக்கள் குறைந்த பொருட் செலவில் அச்சுப்படிகள் வாங்கி மகிழ்வதேயன்றி வேறென் செய்வது?

பரோடா மகாராஜவின் அரண்மனையை ஒப்பனை செய்யப் பதினன்கு படங்கள் வர்மர் வரைந்தார். அவைகள் (1) "நளதமயந்தி" (2) "திரௌபதி துகிலுரிதல்," (3) "கிருஷ்ணனுந் தேவகியும்," (4) "கிருஷ்ணனும் வாசுதேவனும்," (5) "சுபத்திரையும் அர்ச்சுனனும்" (6)'கம்சனும், மாயையும்' (7) 'இளம் பரதனும் சிங்கக்குட்டியும்', (8) "இராதாகிருஷ்ணன்" (9) "சந்தனுவும் கங்கையும்" (10) "கீசகனுந் திரௌபதியும்", (11) "இராமர் சுயம்வரம்", (12) "விசுவாமித்திரரும் மேனகை

யும், (13) "அரிச்சந்திரன் சந்திரமதி", (14) "சந்தனுவும் மச்ச காந்தனும்" என்பன.

மிக அண்மையில் வரையப்பட்டனவும், மிகச் சிறப்பாக எண்ணப்பட்டனவுமாகிய, ஒன்பது படங்கள் மைசூர் மகாராஜா அரண்மனையின் ஓவியக் களஞ்சியத்தில் அமர்ந்திருக்கின்றன.

ஆகவே, இரவி வர்மர் புகழ் புவிமீது புயலே போற் பாவிற்று. சிம்லா, பம்பாய், பூனு, கல்கத்தா, சென்னை, வியன்னு, இலண்டன், சிக்காக்கோ, என்னும் பெரு நகரங்களில் நடைபெற்ற கவின்கலைப் பொருட்காட்சிகளி லெல்லாம் இவருடைய ஓவியங்கள் நன்கு மதிக்கப் பெற்றுப் பதக்கங்களும் நற்சான்றிதழ்களும், இவருக்கு வழங்கப் பெற்றன. சுருங்கக் கூறின் இரவி வர்மர் இரவியே என்னப் புகழொளி வீசி அழியாப் புகழுடம்பு தாங்கி மக்களுள்ளத்தில் நிலவுகின்றனர்.

"ஞால வாழ்வினது மாயம் நவின்றிடற் கரியதன்றே"

ஆனுல், இன்றோ அவர்,

"அரம்பை யூர்வசி போலுள்ள அமர மெல்லியலார் செவ்வி,
திறம்பட வகுத்த வெம்மான் செய்தொழி லொப்பு நோக்க,
விரும்பியே கொல்லா மின்று விண்ணுலக கடைந்து"விட்டார்.

—(பாரதி)

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்—தமிழ்க் கிளை

தமிழ்ப் பேராசிரியராயிருந்து விலகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி விபுலானந்தரவர்கள் இடத்தில் மதுரை வழக்கறிஞர் திருவாளர் S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L. அவர்கள் நியமிக்கப்பட்ட செய்தி கேட்டுப் பேருவகை யடைகிறோம். நமது இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினருள் ஒருவரும், சிறந்த தமிழறிஞருமாகிய திருவாளர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தமிழ் உதவியாசிரியராக நியமனஞ் செய்யப்பட்டது பெருமகிழ்ச்சியை விளைப்பதாகும். இவ்விருவரும் தூய தமிழ்மொழியின் முன்னேற்றத்துக்குப் பெரிய ஊன்றுகோல்களாக இருந்து உழைத்து வருவார்களென நம்புகிறோம்.

சென்னை, நகராண்மைக் கழகம்

தமிழும் சைவமும் இரு கண்ணெனப் போற்றிவரும் திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளை யவர்கள் B. A., L. T. நகராண்மைக் கழகக் கல்வி இலாகாத் தலைவராக நியமிக்கப்பட்டார்களென்ப தறிந்து பெரிதும் மகிழ்கின்றோம்.

அறிவியற் பகுதி—Science

ஒளி நூல்—(Astronomy)

(திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்)

கண்ணுக்குத் தெரியாமல் ஒளிந்திருக்கும் பொருள்களை புலப்படுத்தும் ஒண்மையுடையதே ஒளி. மறைந்திருக்கும் பொருள்களைச் சோதித்து வெளிப்படுத்துவதால் அது சோதி எனவும் பெயர் பெறும். அதனாலேயே ஒளி, சோதி என்பன மறைபொருள்களைப் புலப்படுத்தும் ஞானத்திற்கும் பெயராயின.

ஒளி, சோதி என்பன இருளில் மறைந்து கிடக்கும் பொருள் களை விளங்கச் செய்யும் ஞாயிறு, திங்களாகிய கோள்களுக்குப் பெயராகி, விண்மீன்களையும் உணர்த்துகின்றன. ஆதலின் ஒளி நூல் என்பது ஞாயிறு, திங்கள் முதலிய கோள்களையும் ஏனைய விண்மீன்களையும் பற்றிக் கூறும் நூலாம். கோள்களும் மீன்களும் வானத்திலே உள்ள பொருள்கள். வானம் என்பது இட ஆகு பெயராய் வானத்தில் இருக்கும் பொருள்களையும் உணர்த்துவ தாம். அதனால் வான நூல் என்பதும் ஒளி நூலே.

சோதிப் பொருள்கள் எண்ணற்றன. அவை அளவிட முடி யாத தூரத்தில் விண்ணில் உறைவன. அவைகளைப்பற்றி ஆராய்வ தென்பது பொதுவாக இயலும் காரியம் அன்று. அவைகளை ஆராய்வதற்கு அளவற்ற அறிவாற்றல் வேண்டும். சோதி நூற்கலையின் பயன்களோ வரம்பில்லாதன. இவ்வாறாகச் சிறப்பு வாய்ந்த இக்கலை* உலகில் தோன்றி வளர்ந்து வருகிற வரலாறே இக்கட்டுரையில் கூறப்பெறுவது.

ஒளி நூலைப் போல மிகப்பழமையானதும் பெரும் பய னுடையதுமாகிய கலை உலகில் பிறிதொன்றின்று. பூமியில் முதன் முதலாகத் தோன்றிய மக்களும் ஞாயிற்றையும் வெண் மதியையு

---

* கலை என்பது கல்வி. இரண்டிற்கும் பகுதி கல் என்பது. கலை என்பது ஐ விகுதி பெற்றது. கல்வி என்பது வி விகுதி பெற்றது. இவை இரண்டும் தொழிற் பெயர்கள்.

மாவது அறியாதிருந்திரார். ஆதலின், உலகத் தோற்றக் காலமே வான நூலின் தோற்றக் காலமாம் என்பது மிகையாகாது.

கிறிஸ்தவர்களுடைய வேதமாகிய பைபிளில் "கடவுள் உலகத்தைப் படைத்து, மதி ஞாயிறுகளையும் படைத்து, இவை கால மாறுபாட்டிற்கு அடையாளமாக இருக்கட்டும் என்று கூறினர்" எனக் கூறப்பெற்றிருக்கிறது. சில யூத அறிஞர் 'உலக முதல் மனிதனாகிய ஆதாம் என்பவன் விண்ணுறை மீன்களின் இயல்பையும் பயனையும் நன்கு அறிந்திருந்தான்' எனக் கூறுகின்றனர். கடவுளின் ஏவலால் வெள்ளம் உலகை அழித்தபின் நோவா என்பான் தன்னைச் சேர்ந்தவர்களோடு ஆசியாவின் வடகிழக்குப் பகுதியாகிய சீனத்திற்குச் சென்று தங்கினான் என்று சில ஆசிரியர் கூறுகின்றனர். "இது சீனர்கள் மிகப் பழைய காலத்திலேயே வானநூலை அறிந்து வளர்த்தமைக்குக் காரணம் ஆகலாம்," என டாக்டர் லாங் என்பவர் கூறுகிறார். ஆனால் சீன மக்கள் தாம் தோன்றிய கால முதலாகவே வானநூற் புலமையுடையரா யிருந்ததாக மொழிகின்றனர். நோவாவின் பேரனாகிய பேரரசர் ஹோயாங்டீ என்பாரே முதன்முதலாக வட துருவத்தைக்கண்டு, திசையறி கருவியையும் உண்டுபண்ணினதாக அவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூற்றைம்பத்தோ ராண்டுகளுக்குமுன் இருந்த தங்கள் பேரறிஞர் கன்பூசியஸ் என்பவர் முப்பத்தாறு கிரகணங்களைப் பார்த்துக் குறித்து வைத்திருந்தனர் எனவும் அவர்கள் போற்றிப் புகழ்ந்துரையாடுகின்றனர். எது எப்படியாயினும் சோதி நூலுணர்ச்சியை மிகப் பழைய காலத்திலேயே சீனர் கொண்டிருந்தனர் என்பதற்குத் தடையில்லை.

சில ஆராய்ச்சியாளர் ஒளிநூற்கலை சாலடியரிடமிருந்து தோன்றியதாகச் சாற்றுவர்; சிலர் அது இந்துக்களிடம் பிறந்ததாக இயம்புவர்; மற்றும் சிலர் அது எகிப்தியரிடம் முளைத்ததாக இசைப்பர். பிளேபர் என்ற பேராசிரியர் எடின்பரோ நகரத்திய ராயல் சொசைட்டியில் படித்ததொரு ஆராய்ச்சியுரையில், "முதன் முதலாக ஒளிநூல் முறையை நன்றாக ஆராய்ந்து, அதன் உண்மைகளை மிகவும் நுட்பமாகத் தெரிந்து கொண்ட பெருமை இந்தியரதே. இந்தியரே பண்டைக்காலத்தில் தலைசிறந்த வானநூற் புலவராக இருந்தனர்" எனக் கூறியிருக்கிறார். இது உண்மையே.

இந்தியர் என்பது இங்கே பண்டைய இந்தியாகிய தமிழ் மக்களையே உணர்த்தும்.

உலகத்தில் முதன்முதலாக மக்கள் தோன்றிய இடம் தமிழகம். அதில் தோன்றிய முதன் மொழி தமிழ். ஆதலின் தமிழ் மக்கள் முதன் முதலாகப் பல்லாற்றிலும் நாகரிகம் பெற்று வாழ்ந்தவர் என்று மொழிவதோடு சோதி நூலாராய்ச்சியினும் ஒப்பற்று விளங்கினர் என்பது வியப்பாகாது! அவர்கள்தான் முதன் முதலாக பூமி ஞாயிற்றைச் சுற்றி வருகிறதென்பதைக் கண்டுபிடித்த வீரகர். இவ்வுண்மை அவர்கள் தம் மாதங்களுக்கு சித்திரை, வைகாசி, ஆனி முதலிய பெயர்களை அமைத்திருப்பதிலிருந்தே புலனாகும். சித்திரை மீனை முதலாவதாக உடைய வீடு சித்திரை வீடு. விசாக மீனை முதலாவதாகிய உடையவீடு வைகாசி வீடு (விசாகம்—வைகாசி.) சித்திரை வீட்டில் பூமி தங்கும் காலமே சித்திரை மாதம். வைகாசி வீட்டில் பூமி தங்கும் காலமே வைகாசி மாதம். இங்ஙனமாகவே ஏனைய மாதங்களும் பெயர் பெற்றன.

ஞாயிறு அசைவற்றிருப்பது. பூமியே ஞாயிற்றைச் சுற்றி வருவது. பூமி சுற்றுவதனால் பூமியிலிருப்போர் அது அசையாமல் இருக்கிறதெனவும், இரவிலே பூமியைச் சுற்றி வருகிறதாகவும் பார்த்தறிவர். பூமி சித்திரை வீட்டில் வாழும்போது அதாவது சித்திரை மாதத்தில் இரவி அதற்கு நேர் எதிர் வீடாகிய ஐப்பசி வீட்டில் தங்குவதுபோலக் காணப்படும். இப் போலித் தோற்றத்தை மெய்யென நம்பிய ஆரிய மக்கள் சித்திரை மாதத்தை ஐப்பசி வீட்டிற்குத் தாம் இட்ட பெயராகிய மேடமதி என வழங்குவர்; வைகாசி மாதத்தை இடபமாதம் என்பர்; இங்ஙனமாகவே பிறமாதங்களையும் தாம் இரவித் தோற்றத்தில் மயங்கிய பெயர்களால் அழைப்பர், இதனால் ஆரியருடைய நாகரிகத்தின் முன்னரே தமிழ் மக்கள் வானூற்புலவராய் நாகரிக வாழ்க்கையில் ஒப்பற்றிருந்தனர் என்பது வெள்ளிடை மலையேபோல் விளங்குகின்றது.

மைலீடஸ் (Miletus) என்ற தீவினராகிய தேல்ஸ் என்பவரே வானூலை முதன்முதலாக மேல்நாட்டில் பரப்பினவர் எனப்படுகின்றார். அவர் அக்கலையை எகிப்தில் கற்றறிந்தார். மைலீடஸ் என்பது கிரீஸ் நாட்டை ஒட்டியிருக்கிறது. கி. மு. 640-ல் பிறந்தவ

ராகிய தேல்ஸ் தமது நாட்டினருக்கு இரவும் பகலும் ஏற்றத் தாழ்வாக இருப்பதன் காரணத்தையும், கிரகணங்கள் தோன்றும் விதத்தையும், அவைகளைக் கணக்கிட்டு முன்னரே அறிவிக்கும் வழியையும் காட்டினர். அவர் கூறிய ஒரு இரவி மறைவு (சூரிய கிரகணம்) அவர் மொழிந்தபடியே நிகழ்ந்தது.

அவருடைய மாணுக்கர் அலெக்ஸிமாண்டர் என்பார். அவர் ஸ்பார்டா (Sparta) வில் பகற்போதில் இரவியின் போக்கால் காலத்தை அளக்கும் ஓர் இடத்தைக் கட்டி முடித்து அதன் உதவியால் இரவிவீதியின் சரிவையும், அயனங்கள் தோன்றும் விதத்தையும் தெளிவுபடுத்தினர். அவர் பூமி உருண்டை வடிவினதென ஊகித்தறிந்ததோடு விண்மீன்களின் உருண்டை உருவையும் எடுத்துரைத்தார்.

இந்தியாவிலிருந்து எகிப்திற்கும், எகிப்திலிருந்து கிரீசிற்கும் பரவிய சோதிக்கலை இத்தாலி (Italy) நாட்டிலும் தலைதூக்கத் தொடங்கிற்று. பிதாகோராஸ் என்ற புலவர் அந்நாட்டில் இதை வளர்க்கத் தொடங்கினர். அவர் பூமி உருண்டை வடிவினதே என்பதைப் பல ஏதுக்களால் நிலைநாட்டினர். அவர் ஞாயிறு ஒரே இடத்தில் அசையாமல் நிற்பதையும் அதனைப் பூமி முதலிய கோள்கள் சுற்றிவருவதையும் தெளிவுறுத்தினர்; ஆனல் இதை அவர் தமது மாணவருக்குமட்டுமே புகன்றார். ஏனென்றல் இதை அவர் வெளிப்படையாகக் கூறியிருப்பாராஞல் அக்காலத்திய அறிவற்ற மனிதர்களால் பல்லாற்ருனும் துன்புறுத்தப்பட்டு அழிந்திருப்பார். அவருக்கு நூருண்டுகளின் பின் இருந்த அனெக்சாகோராஸ் என்பார் சூரியன் ஒரு எரிப்பிழம்பு என்று கூறியதற்காக நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டார்.

வானநூலுணர்ச்சியில் முதன்மைபெற்றது கால அளவே ஆதலால், அறிஞர் இரவிமதிகளின் பெயர்ச்சிகளைக் கணித்தறிவதிலே ஈடுபட்டு மிக முயன்று வந்தனர். மேடல், யூக்டிமான் என்ற கிரேக்க அறிஞரிருவரும் அரும்பாடுபட்டுப் பல உண்மைகளைக் கண்டறிந்து பத்தொன்பது ஆண்டுவட்டத்தை (Cycle of 19 Years) ஏற்படுத்தினர்கள். இவ்வட்டம் கி. மு. 433 ஜுலை மாதம் 16ம் நாள் ஏற்பட்டு இன்றும் கிரீசில் நடைமுறையில் இருந்து வருகிறது. அது பொன்எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு இன்றும் பொன்எண் என்று போற்றப்படுகிறது.

பின் கிரீசில் உள்ள சினிடஸ் (Cnidus) என்ற ஊரில் ஈடோக்சஸ் என்ற அறிஞர் தோன்றி அங்கே ஓர் சோதி ஆராய்ச்சி மண்டபத்தைக் (Observatory) கட்டினர். அது அவர் இறந்த பல ஆண்டுகளின் பின்னரே வெளிப்பட்டது. அவர் கிரேக்க நாட்டிற்கு ஏற்றபடி இரவி மதிகளின் தோற்ற மறைவுகளைக் காட்டக்கூடிய ஓர் உருண்டையை அமைத்தார். அவர் இரண்டு நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று விண்வட்டத்தில் பன்னிரண்டு வீடுகளையும், அவை தம்முள் விண்மீன்களின் நிலையையும் குறிக்கின்றது; மற்ருென்று அவைகளின் தோற்ற மறைவுக் காலங்களை விவரிக்கிறது. கி. மு. 276-ல் மாசிடன் (Macedon) நாட்டுமன்னராக இருந்த அரேடஸ் என்பார் அவர் காலம்வரை தெரிந்த சோதிநூற் கருத்துக்களையெல்லாம் ஒன்றுசேர்த்துக் கவிகள் இயற்றினர். அக்கவிகள் இரண்டுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற்பகுதி ஈடோக்சஸ் செய்த உருண்டையையும், இரண்டாம்பகுதி கால மாறுபாடுகளை முன்னலேயே அறிந்துகொள்ளும் விதத்தையும் விவரிக்கின்றன. இந்நூல்கள் இன்றுவரை பேணப்பட்டு வருகின்றன. (தொடரும்)

Arithmetic—எண்ணளவை.

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(கக-ம் சிலம்பு: உளஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலேயரின் முன்னோர்களான டியூட்டன் வகுப்பினர் "பீச்" என்ற ஒரு மரத்தின் பட்டையில் எதையும் எழுதி வந்தார்கள். அதனல் "பீச்" என்பது புக்கே" என்ருகிப் பின் "புக்" என்று ஆங்கிலத்தில் இப்பொழுது வழங்குகிறது.

Book சுவடி

சுவடி என்பது சுவடு என்பதினின்றும் பிறந்ததாகும். சுவடு என்பது குறி அல்லது அடையாளம் எனப் பொருள் படும்; அடிச்சுவடு என்பது நோக்குக. தமிழில் "Book" என்பதற்கு இச் "சுவடி" யென்ற விழுமிய பொருள் பொதிந்த பெயரைத் தேடியளித்த நம் முன்னோர் தம் பெருமை போற்றற்குரிய தன்ரோ? ஆங்கிலத்தில் ஒருவன் அவனுடைய முன்னோர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிருன் என்று கூறுவதுண்டு. அரிய பெரிய

கருத்துக்களின் அடிச்சுவடுகளை விட்டு வைப்பதற்கே நூல்கள் எழுந்தனவாகும். எனவே சுவடி என்ற பெயர்ப் பொருத்தம் ஓர்க.

பத்து பழங்கள் என்றால் பழங்களைக் குறித்து நிற்பதனால் பத்து என்ற சொல் பொருளுடையதாக இருக்கின்றது. அவ்வா றின்றி பத்து என்று மட்டும் கூறினால் 'பத்து' ஒன்றுமில்லை என்பதே பொருளாக நிற்கும், ஒரு பருப் பொருளையுங் குறியாது நிற்றலின். அவ்வாறே "இருபது" என்றுமட்டுங் கூறினால் அது "இருபது" ஒன்றுமில்லை என்பதையே குறிக்கும். ஆயினும் "பத்து" ஒன்றுமில்லை என்பதைப்போல் இரண்டு மடங்கானது "இருபது" ஒன்றுமில்லை யென்னும் ஓர் அகத்தொடர்புள்ளமை மட்டும் புலனாகும். ஆங்கிலத்தில் இவ்வாறு பருப் பொரு ளொன்றையுங் குறியாது நிற்கும் எண்ணிற்கு "Abstract numbers" என்று பெயர். குறித்து நின்ற பருப் பொருளைப் பறித்து விடப்பட்ட எண் என்பது Abstract numbers என்பதின் விரிந்த பொருள். எனவே,

Abstract numbers ... வெற்றெண்
Concrete numbers ... தனைத்தெண்

Quantity என்பது தனைத்து என்னும் பொருளுடையதாதலின் தனைத்து என்னும் பருப்பொருட்டொகை குறிக்குஞ் சொல்லே யடியாக முன்பு quantity என்பதற்குப் பொருள் கொண்டா மாகலின் quantity என்பதைக் குறிக்கும் concrete என்பதற்கும் ஈண்டுத் தனைத்து என்றே பொருள் கொள்ளப்பட்டது.

Subtraction	...	கழித்தல்
To subract	...	கழிக்க
Subtractive	...	கழி (உரிச்சொல்)
Subtractive number		கழி யெண்.
Subtrahend	...	கழியெண், கழிவது.
Minuend	...	கழிப்பது (அஃதாவது கழிக்கக் கொடுப்பது)
Remainder	...	மீதி, மிச்சம், எச்சம், கழிந்தது

முற்காலத்தில் ஒன்று என்பதைக் குறிப்பதற்கு ஒரு விரலை யும், இரண்டு என்பதைக் குறிக்க இரண்டு விரல்களையும் அவ்வாறே

மூன்று நான்கு ஐந்து என்பவற்றைக் குறிக்க அவ்வத்தனை விரல்களையும் அதற்கு மேல்வரும் ஆறு ஏழு என்று வருபவற்றைக் குறிக்க மற்றொரு கையின் விரல்களையும் விட்டுக் குறிப்பிடும் வழக்கத்திற்கேற்ப விரல் என்று பொருள்படும் digitus என்னும் சொல்லிலிருந்து Digit என்பது பிறந்ததாகும். அவ்வாறே எல்லா எண்களையுங் கைவிரல்களாலேயே குறிக்கக் கூடுமானால் digit என்ற (விரலைக் குறிக்கும்) சொல்லை வழக்காற்றிற் கொண்டிருப்பது முறையே. ஆனால் அவ்வாறு குறிப்பிட முடியாதிருக்கும் நிலையில் அதைவிடாப் பிடியாகக் கட்டிக்கொண்டிருப்பது ஆங்கிலேயரின் குருட்டுப் பழக்கமேயாகும். தமிழில் அவ்வாறு இடர்ப்பட வேண்டியதில்லை. கரும்பு பிரம்பு முதலியவற்றிற்குக் கணுக்கள் இருக்கக் காண்கின்றோம். அதைத் துணையாகக் கொண்டு நாம் முதற் கணு, இரண்டாங் கணு, மூன்றாங் கணு என எளிதிற் குறிக்கலாம். எனவே அச்சொற் சிறப்புடைமை பெறுதும்.

Digit	...	கணு
Integer	...	முழுஎண்
Like	...	ஒத்த, ஒருமாதிரி.
Like quantities	...	ஒத்த தனைத்துகள்
Unlike quantities	...	ஒவ்வாத் தனைத்துகள்
Value	...	மதிப்பு
Local value	...	இடமதிப்பு
Intrinsic value	...	உள்மதிப்பு
Numeration	...	எண்ணிக்கை, எண்ணீடு
Notation	...	குறியிடுகை, குறியீடு

Figure என்பது எண்ணளவையில் குறியென்றே பொருள்படும், வடிவளவையிற் போன்று ஒரு வடிவைக் குறியாது ஒரு எண்ணையே குறித்து நிற்றலின்.

Arabic system	...	அராபிய முறை
Roman system	...	உரோமானிய முறை
Tamil system	...	தமிழ் முறை
Sanskrit system	...	சமஸ்கிருத முறை
Decimal	...	பதின்; பதின் பகுப்பு
Decimal notation		பதின்குறியீடு, பதின் பகுப்புக் குறியீடு

Decimal point	...	பதின்புள்ளி, பதிம்புள்ளி.
Deodecimal	...	பன்னீரன் பகுப்பு
Deodecimal notation		பன்னீரன்பகுப்புக் குறியீடு.
Vigesimal	...	இருபதன், இருபதன்பகுப்பு
Ordinary	...	வழங்கியலான
Ordinary notation		வழங்கியற் குறியீடு
Cypher	...	சுன்னம்
Zero	...	ஷி.
Two systems of notation	...	குறியீட்டு இருமுறைகள்
Long system	...	நெடு முறை
Short system	...	குறு முறை.

நெடுமுறை என்பது ஆங்கிலேயரால் பின்பற்றப்பட்டு வருவதும், குறுமுறை யென்பது அமெரிக்கர்களாலும் ஐரோப்பியர்களாலும் பின்பற்றப்பட்டு வருவதுமாகும். தமிழ்முறை குறுமுறையை யொட்டியதே யாகும். அம்முறையே அறிவியற் கொத்த திருந்திய முறையாகும் என்று அறிவியல் வல்லோர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

Order	...	அடுக்கு
First order	...	முதலடுக்கு
Second order	...	இரண்டாமடுக்கு.

Simple Rules, Compound Rules என ஆங்கிலத்தில் வழங்குமவற்றிற்கு நேர்பொருள் கூறின் நகையை விளைப்பதாகும். அவ்விரு தொடர்களும் அறிவியற் கொத்தனவல்ல ; வழக்கத்தை யொட்டியே பயின்று வருவன.

Simple Rules	...	கலவா வெண்ணியங்கியல்
Compound Rules	...	கலவை யெண்ணியங்கியல்
Operation	...	இயக்கம்.

—காழி. சிவ. கண்ணுசாமி B. A.

சமயமும் தத்துவமும்
Religion & Philosophy

* இங்கும், அங்கும்.

(ஆசிரியர், அ. வரதநஞ்சையபிள்ளை, தோரமங்கலம்,
சலகண்டபுரம்.)

இங்கும் அங்கும் என்னும் இச்சொற்கள் ஏழாம் வேற்றுமை யிடப் பொருளுணர்த்தும் சுட்டுச் சொற்கள். இவற்றில் இங்கு என்பது அணித்தாய இடத்தையும் அங்கு என்பது சேய்மை இடத்தையும் குறிக்கும். ஈண்டு, அவை ஆகுபெயர்ப் பொருள வாகி இவ்விடத்து நிகழ்ச்சிகட்கும் அவ்விடத்து நிகழ்ச்சிகட்கும் உளவாய இயைபுகளை யுணர்த்து வனவாம். 'இவ்விடம்' என்றது நமது கட்புலனாக இவ்வுடலுடன் இவ்வுலகில் நுகரும் நுகர்ச்சி களையும், 'அவ்விடம்' என்றது காண்டல் அளவைக் கெட்டாததாகி ஆன்றோர்கண்ட உரையளவை முதலியவற்றால் கருதற்குரிய பிறநுகர்ச்சிகளையும் உணர்த்து மென்க.

"இங்கற்றபடியங்கு மெனவறியு நல்லறிஞ ரெக்காலமும் முதவுவா—
ரின்சொ றவரூர் பொய்ம்மையா மிழுக்குரையா ரிரங்குவார்
[கொலைகள் புரியார். . ."

என்றார் தாயுமான வடிகளாரும்.

இவ்வாற்றால், இவ்வுலகின் இயல்பிற் கேற்றவாறு காரணப் பொருட்கள் அருவ நிலையிலுள்ளன வென்றும், அவ்வவர் பயிற் சிக்கேற்ற பயன்களை முடிவில் அடைந்தே தீரவேண்டு மென்றும், இவை இயற்கைச் சட்டத்தின் மாறாத நியதியென்றும் விளங்கு கிறது. இவ்வுண்மையைச் சற்றுக் கூர்ந்து நோக்குவோம்.

---

* இஃது திரிசிரபுரம் சைவசித்தாந்த சபையின் 48-ம் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது பண்டிதர் திருவாளர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவைத் தலைமையில் நிகழ்த்திய சொற் பொழிவின் சாரம்.

நமது நனவிற்காணும் நிகழ்ச்சிகளே பெரும் பான்மையும் கனவினுந் தொடர்கின்றன.

“உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு”

எனத் தெய்வப்புலவரும், ஈண்டை நிகழச்சிக்கும் ஆண்டைய நிகழ்ச்சிக்கும் ஒருவாறு தொடர்புண்மையை விளக்கினர். காரணத்தின் பண்புகள் காரியத்தின் கண்ணும் தவருது காணப்படும். தாய்தந்தையரின் உருவ அமைப்புக்களோ நடைநொடிபாவனைகளோ அவர்தம் மக்கள்பாற் சிறிதேனும் தோன்ருதிரா. உயர்ந்த பொன்ருற் செய்யப்பட்ட அணிகலன் மிக்க ஒளியையும், மட்டத் தங்கத்தா லாக்கப்பட்ட நகை குன்றியவிளக்கத்தையும் உடையவாய்த் தங் காரணத்தின் பண்புகளைச் சுட்டுவ தியல்பேயன்ருே? இவ்வேதுவே கருவியாகக் கொண்டு இங்கும் அங்கும் ஒத்தபடியை அறிவேமாக. இவ்வுலகில் நம்மைச் சூழ்ந்து சுற்றியுள்ள பொருட்கள் எவையும், தோன்றல், வாழ்தல், முடிதல் என்னும் முத்திறத் தொழிற் பாட்டை மேற்கொண்டு நிகழ்வனவாகக் காண்கின்ருேம். அவற்றை முறையே ஆராய்வோமாக.

(க) தோற்றம்.

ஓர் வித்தினின்றும் முளை கிளம்புகின்றது. ஆயினும் அம் முளையை உள்ளுற வளர்த்துப் பின் வெளியிற் ருேற்றுவிக்கும் சத்தி, அவ்வித்தில் அருவமாய்ப் பொதிந்து நிற்கின்ற தென்பதனை யாரே மறுப்பவர்? முட்டையினின்றும் பிறக்கும் பறவைகள் வெளிப்படும்போதே எல்லா வுறுப்புக்களும் நிறைவுற அமைந்து வருகின்றன. அம்முட்டைக்குள் அவற்றை அங்ஙனம் வளர்க்கும் தெய்வ இயற்கை யாற்றல் கரந்துள்ளதன்ருே? தோற்றத்தின் முன்னுள்ளது யாது என்னுங் கேள்விக்கு விடை “இன்மையே.” என்பதுதவிர வேறியாது? முடிவின் பின்னுள்ளது யாது என்பதற்கும் இவ்விடையே யன்றி வேறு என் கூறுவது? இதனுல் எல்லாப் பொருட்களும் இன்மையினின்று தோன்றி முடிவில் இன்மையாகவே முடிகின்றன என்றறியக் கிடக்கின்றது. இதனைத் தருக்கநூலார் முன்னின்மை, பின்னின்மை யெனக்கூறி இவ்வபாவமும் (இன்மை) ஓர்பொருளென்றெண்ணுவர். ஆ! என்னே புரட்டு! இன்மை ஓர் உண்மையைத் தோற்றுவிக்கு மென்பது முற்றும் முரணன்ருே! எனின்,

ஈண்டு இன்மை என்றது, நம்கட்புலனுகா அருவ வடிவினைக் குறித்ததாமென்றும், அருவமே உருவத்திற்குக் காரணமாமென உணர்த்தியதல்லது முழுவதூஉமின்மையைச் (அத்யந்தாபாவம்) சுட்டியதன்றென்றும் விடுக்க. இவ்வாராய்ச்சியால், ஒருபொருள் அருவநிலை அருவுருவநிலை உருவநிலை என்னும் மூவகையாயுளதா மென்பது தெளியப்பட்டது. அருவினின்றும் அருவுருத்தோன்றி யதன்பின்னரே உருவப்புலப்பா டுளதாமென்றும் கண்டாம். இதுவே தோற்றத்தின் ஒழுங்கு. இஃது நாம் இங்கறிந்தபொருள். நம் சைவசித்தாந்த நூலுள், உலகத்தோற்றமும் இம்முறையானே நிகழ்வது காட்டப்பட்டது. இறைவனது சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு அருவநிலைகளும், சதாசிவம் என்னும் ஓர் அருவுருவநிலையும், மகேச்சுரன், உருத்திரன், விண்டு, பிரமன் என்னும் நான்குருவநிலைகளும் ஆகிய ஒன்பான் நிலைகளும் உலகத் தோற்ற முதலியவற்றிற்குக் காரணமாமென இயற்கைமாருத உண்மை சுட்டப்படுகின்றது. இஃது நாம் அங்கறியும் பொருளாம்.

இன்னுங்காண்மின். ஓர் மகவைப்பெறுவோர் தந்தையுந் தாயுமென்னு மிருவான்றே? இவ்வியல்பு, இயங்கியற் பொருள் கட்கேயன்றி நிலையியற்பொருளவாகிய மரம் செடிமுதலிய வற்றிற் கும் பொதுவேயாம். ஆண்சத்து, பெண்சத்து என்னும் இவ் விரண்டும் மாவர்க்கங்களின் உறுப்புக்களிற் றனித்தனி யுள்ள தென்றும், அவை ஒன்றேடொன்று கலந்தவழியே காயும் கனியு மாகிய பயனைப் படைக்கின்றனவென்றும் இக்காலத்து மா நூற் கலைஞரும் கண்டுரைக்கின்றனர். காரணத்தின்றன்மை காரியத்துப் புலனுகுமென முற்குறித்தவாறே இவ்வுலகைத் தோற்றுவித்தற் குப் பால் அல் தன்மையில் வேறுபட்ட இருபொருட்கள் ஒன்றை யொன்று பிரிப்பறப் பொருந்திக் கலந்துளதாதல் வேண்டுமெனக் குறிக்கலாம். இவ்வுண்மையை நாம் இங்குக் கண்டாம். நம் சைவ ஞான நூலும்,

> "சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லா
> மொத்தொவ்வா வாணும்பெண்ணு முயர்குணகுணியுமாகி
> வைத்தன னவளால்வந்த வாக்கமிவ் வாழ்க்கையெல்லாம்
> . . . ."

என இதனையே சுட்டுகின்றது.

உயிர்ப்பொருட்கள் ஆண்பெண்ணெனப் பகுப்புற்றுக் கலக்கு மாறே உயிரில் பொருட்கள்யாவும் குணகுணி என்னும் பாகுபா

டுற்றுப் பிரிப்பற நிற்கின்றன. சத்தியும் சிவமும் ஒருங்கியைந்து நின்று உலகமுண்டாக்குதலின் இங்ஙனம் எல்லாப்பொருட்களும் அக்காரணத்தின் அமைப்புமுறையில் வழாது தோன்றுவன வாயின.

மக்களைப் பெறுவதூஉம் பெற்று வளர்ப்பதூஉம் பெண்மைக்குரிய இயல்பாகவே அமைந்ததென்னை? ஆண்மைக்கு இயல்பாக மகப்பேறு தோன்றாமைக்குப் பொருட்டியாது? இதற்குக் காரணங் கூறும் சமயங்கள் சைவமொன்று தவிர மற்றில. சிவம் சுத்த ஞானமயம். சத்தி முழுக்கிரியாரூபம். இறைவன் ஒருருக் கொள்ளவேண்டின் அருட்சத்தியே தால்வேண்டும், தூலமாகிய தொழில் நிகழ்ச்சிக்கும் தோற்றத்திற்கும் அவளே காரணமாதலின். இவ்வுண்மையை நம் உடல் அமைப்பிலுங் காணலாம்.

அறிகருவிகளாகிய கண் முதலியன பொருளை அறிந்து இச்சையை விளக்கின்றன. அவை சூக்கும வடிவின. அவ்விச்சையை நிறைவேற்றற்கண் கைகால் முதலிய தொழிற் கருவிகள் முனைந்து வினைபுரிதல்வேண்டும். இவை தூலவடிவின இவ்வாற்றால் அறிவு முதிர்ந்த பரம்பொருள் இறைவனென்றும் செய்கைமுதிர்ந்த வலிமை சிவசத்தி என்றும், நமது அறிகருவிகளும் வினைபுரி கருவிகளும் சேர்ந்து ஒருங்கு தொழில் நடாத்தி வாழ்வளிப்பது போன்று சிவமும் சத்தியும் கலந்து அம்மையும் அப்பனுமாகி உயிர்கட்கு வாழ்வருள்கின்றதென்றும் இங்கும் அங்கும் பொருள் ஒப்புக் காண்கின்றோம். அறிகருவிகள் தொழில் செய்யா. தொழில் புரிகருவிகள் அவ்வாறறியா. அறிவில்வழிச் செயல் நடவாது. செய்கையில்வழி அறிவாற்பயனின்று. இஃது ஆணில் வழிப் பெண்ணில்லை பெண் இன்றேல் ஆணுமின்று என்னும் வியவகாரத்தோடொத்தது. மாதிருக்கும் பாதியனாக (அர்த்தநாரீச்சுர மூர்த்தம்) எம்பசுபதி உருக்கொண்டதும் இதனையே குறிப்பதாம். இப்பொருள் யானே கூறும் உத்திவாதமென்று கருதன்மின்!

திருநாவுக்கரையர் விரும்பியவாறு இறைவன் திருவையாற்றிற் காட்டிய கைலைக்காட்சியின் நுட்பம் இஃதேயாம். ஆளுடைய அரசு கைலைக்காட்சியைக் கண்டு வியந்து ஓதியருளிய பாசுரம் யாவரும் அறிந்ததே. அவர் கண்ட காட்சிகள்தாம்யாவை

"காதன்மடப்பிடி யோடுங்களிறு வருவன" கண்டார்.
"கோழிபெடையொடுங் கூடிக்குளிர்ந்து வருவன" கண்டார்.
"வரிக்குயில்பேடையொ டாடிவைகி வருவன" கண்டார்.

பிறவும் இவ்வாறே. இக்காட்சி நமக்கு நினைவூட்டுவது யாது? எங்கும் நிறைந்த சிவத்தின்றன்மை உலகைச் சூழ்ந்து தொழிற் படுத்துகின்றது என்னு மிஃதே யன்றோ?

அறிவாற் சூழ்வுழிச் செய்கையும் செய்கை நிகழுங்கால் அதனைத் திறம்பட ஆற்றற்கேற்ற அறிவும் ஒன்றினொன்று தொடர்ந்து தோன்றல் யாம் இங்கறியும் பொருளன்றோ? இதனையே சிவசத்திகளின் செயல்களினும் காணலாம்.

"சிவம்சத்தி தன்னையீன்றுஞ் சத்திதான் சிவத்தையீன்று
மூவர்திருவரும் புணர்ந்திங் குலகுயி ரெல்லாமீன்றும்
பவன்பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்........"

என்றோதுதலும் காண்க.

ஓர் பெண்ணுக்கும் ஆணுக்கும் நேர்பட எவ்வெவ்வகையின் முறை கூறலாம்? ஒருத்தி தன் மணாளனுக்குப் பெண்டாட்டியாவாள், மகனுக்குத் தாயாவாள், தந்தைக்கு மகளாவாள். தன்னுடன்பிறந்தோர்க்குத் தங்கை அல்லது தமக்கையாவாள். இதன்மேற்போந்த முறை வேறில்லையன்றோ? இங்ஙனமே எமது பரமனார்க்கு எமது அன்னையாகிய சிவசத்தியும் முறையுடையவளாகின்றாள் என மணிவாசகப்பெருமானார் உரைத்தருளிய பாசுரமுங் காண்மின்!

"......இமவான்மகட்குத்—தன்றுணைக்கேள்வன் மகன்றகப்பன்
றமையனெம்மையன்......"

என்றதன் கருத்தியாது? சிவத்தின் ஆணைவழி நின்று சத்தி தொழிற்படலால் தலைவியை ஒத்தது சத்தியின் வழித்தாய்ச் சிவம் தோற்றலிற் றாயாயிற்று.

ஒரோவழிச் சிவத்தின் அதீனத்தில் அடங்கி நிற்றலின் மகளாயிற்று. ஞானமுன்னும் செயல்பின்னும் நிகழ்தலாற் றங்கையாயிற்று. இங்ஙனம் உலகில் நாம் கொள்ளும் முறைகளை முற்றும் சத்திபெற்றிருப்பது நாம் இங்கும் அங்கும் அறிந்து களிக்கும் பொருளாயவாறு நோக்குக. ஓர் இளமகவு, தன் தாய் காட்டிய பின்பே தந்தையை உணர்கின்றது. அங்கும் "தாயுடன் சென்று பின்றாதையைக்கூடிப் பின்றாயைமறந்-தேயுமதே நிட்டை" என்றார் பட்டினத்தடிகளும். (தொடரும்)



ஜோன்-படைத்தலைவி.

சிறுகதைகள்-Short Stories

ஜோன் வரலாற்றுச் சுருக்கம்

(Life of Joan of Arc)

(1412—1431)

(வ. சுப்பையா பிள்ளை எழுதியது)

பிரான்சு நகரத்தில் டாம்ரிமி என்னுஞ் சிற்றூரில் ஜோன் என்னும் வீரப் பெண்மணி 1412-ம் ஆண்டில் பிறந்தனள். இவள் தந்தையார் டாம்ரிமிக்கு நாட்டாண்மைக்காரரா யிருந்தனர். இவருக்குச் சில ஆட்டுமந்தைகளுண்டு. இவர் தமது மகளை மிகவும் அருமையாக வளர்த்து வந்தார்.

ஜோன் தனது தந்தையாரால் கல்வி கற்பிக்கப்படவில்லை; எழுதவும் படிக்கவும் தெரியாள். ஆனால் இவள் வீட்டுவேலைகளைச் சுருசுருப்புடன் செய்வள். நூல் நூற்பதிலும், தையல் வேலையிலும் திறமை மிக்கவள். இவள் இயற்கையிலேயே சிறந்த அழகும், உடல் வலிமையும், அஞ்சா நெஞ்சமும் படைந்தவள். ஆனால் கடவுளிடத்தில் அளவில் அன்புடையவள். அதனால் தன் பெற்றோரும் மற்றோரும் அறியாமலே தன் வீட்டிற் கருகேயுள்ள கோயிலுக்குள் அடிக்கடி சென்று கடவுளை வணங்கிவருவள்.

இவள் இத்துணைச் சிறுமியாய் வளர்ந்து வருங்காலத்தில் 1425-ம் ஆண்டில் பிரான்சுக்காரர்க்கும் ஆங்கில நாட்டினர்க்கும் போர் துவங்கியது. ஆங்கிலர் சார்பாகக் கிளம்பிய ஹென்ரி என்னுங் கள்வர் தலைவனொருவன் தன் துணைவர்களுடன் டாம்ரிமிக்குட் புகுந்து ஆடுமாடுகளைக் கவர்ந்து சென்றனன். உடனே பார்தலோமி என்னும் பிரான்சு படைத்தலைவன் அக்கள்வர் தலைவனைத் தாக்கியடித்து ஆநிரைகளை மீட்டுக் கொண்டுவந்து உரியவர்களிடம் ஒப்புவித்தனன்.

அப்போது ஜோன் அதனைப் பார்த்துப் பெருமகிழ் வுற்றனள். அதுமுதல் ஐந்தாண்டு வரையில் அவள் தெய்வக் காட்சியும், தெய்வ ஒலிகளும் கண்டும் கேட்டும் வந்தாள். சில அருண்

3743

முனிவர்களை அவள் நேரிற் கண்டு வணங்கியதுமுண்டு. பின்பு ஜோனும் அவள் தன் ஊரவரும் நியூஷாட்டல் என்னும் ஊரைப் புகலிடமாய்க்கொண்டனர். அப்போது டாம்ரிமி முழுதும் பகைவர்களால் எரிக்கப்பட்டுப் பாழாய்க் கிடப்பதைக் கண்ணுற்று ஜோன் வெயிலிற்பட்ட புழுப்போற் றுடிதுடித்தனள். அப்போது 'ஜோன் தனது நாட்டைப் பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கின்ருள்' என்னுந் தெய்வ ஒலி அவட்குப் பலமுறை கேட்டது.

அதுமுதல் ஜோன், "குதிரை ஏற்றமும், போர் முறையும் பயின்றறியாத யான், வாளும் ஈட்டியும் பிடித்தறியாத யான் போர் மேற் செல்வது எவ்வாறு," என்று அடிக்கடி எண்ணினள். எனினும் அவள் படைத்தலைவியாகப் போருக்குச் செல்லத் துணிந்தனள். ஆனல் எங்ஙனம் போவது என்பது அவளுக்குப் புலப்படவில்லை. கடைசியாக ராபர்ட் என்னும் பிரான்சு நாட்டுப் படைத்தலைவரிடஞ் சென்று தனது எண்ணத்தைத் தெரிவித்தாள். அவர், 'இவள் கிறுக்குப்பிடித்தவள்போல் பிதற்றுகின்ருள்' என்று அவளைக் கன்னத்தி லடித்து, அவள் தந்தையாரிடம் போகுமாறு அனுப்பிவிட்டார்.

பின்னர் ஆங்கிலர் ஓர்லீன்சு என்னும் நகரை முற்றுகையிட்டனர். அப்போது ராபர்ட் என்பவர் மனங்கலங்கி ஜோனிடம் வலிய வந்து அரசிளைஞனைக் காணுமாறு அவளுக்கு ஆணுடையும் கூரிய வாளொன்றும் தந்து அனுப்பினர். பின்பு இவள் ஏழு போர் மறவர்களோடு பதினொருநாள் குதிரைமேற் சென்று அரசனதிருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தனள். இவள் அழகுமிக்கவளாயிருந்தும் தெய்வத் தன்மையுடையவளாய்க் காணப்பட்டமையின் வழியில் இவள்மீது தவருன அன்பு பாராட்ட இவள் கூட வந்தவர்கட்கு மனம் வரவில்லை என்பது இங்கே உன்னிக்கற்பாலது. அரசிளைஞனும் அமைச்சர்களும் ஜோனின் அருஞ்செயல்களைப் பலவகைக் கேள்விகளாற் சோதித்து உண்மை தேறிப் பின்பு அரசிளைஞன் அவளை ஓர்லீன்சுக்குப் போகுமாறு இருப்புச் சட்டையும், திறமிக்க குதிரைகளும், தகுந்த படையும் கொடுத்து அனுப்பினன். புறப்படுமுன் தெய்வக் கட்டளையின்படி சிறந்த வாளொன்றும் கிடைக்கப் பெற்ருள். நேரே ஓர்லீன்சுக்குச் சென்று ஆங்கிலப் படையைப் பல்லிடங்களில் தோல்வி பெறச் செய்தனள். ஒருநாள் போர்நடக்கும்போது அவள் மார்

பில் ஓர் அம்பு ஊடுருவிப்பாய்ந்து அதனுல் குருதிவெள்ளம் பெருக்கெடுத்தது. அவள் அவ்வம்பை இடது கையால் பிடுங்கி விட்டு அதற்கு மருந்தும் இடாமல் போர்மேற் சென்றனள். இவளது மனத்திட்பந்தான் என்னே! இவள் போருக்குச் செல்லும் போதும், போர்துவங்கும் போதும் கடவுளை வணங்கு வள். இவள் தான் முன் உறுதிகூறியபடி ஓர்லீன்சைப் பிரான்சு நாட்டினர்க்கு மீட்டுக் கொடுத்தனள்.

இன்னுந் தன் அரசனுக்கு ரீம்சில் முடிசூட்டவும் பேரவாக் கொண்டு அரசனிடஞ் சென்ருள். அரசன் அவளை மிகவும் அன் போடு வரவேற்ருனுயினும் அவள் விருப்பத்திற் கிசையவில்லை. இதற்கிடையில் ஜோன் ஆங்கிலப்படை வலுவுற்றிருந்த யார்கோ என்னுங் கோட்டையைத் தாக்கி வெற்றி கண்டனள். அங்கே ஆங்கிலப் படைத்தலைவர் சிலரைச் சிறைப்படுத்தினர். பிரான்சு படைஞர் அவர்களிற் சிலரைக் கடுங்கொலை புரிந்தனர். அங்ஙனம் முறை தவறித் தன் படைஞர் செய்த கொடுஞ்செயலை ஜோன் கண்டித்தனள்.


பின்னர் ஆங்கிலர் கைப்பற்றியிருந்த போஜன்சி, பாத்தே என்னுங் கோட்டைகளையும் போர் செய்து கைக்கொண்டனள். போர்மேற் சென்றுவிட்டால் ஜோன் ஊணும் உறக்கமும் மெய் வருத்தமும் சிறிதும் பாராள். ஒருமுறை அவள் தான் மேற்போட் டிருந்த இருப்புச் சட்டையினை ஆறுநாள் இரவும் பகலும் கழற்ருமலே யிருந்தாள்.

முடிவாக அரசன் ரீம்சில் முடிசூட்டப் பெறுதற்கு இசைந்து ஜோனுடன் சென்ருன். முடிசூட்டு விழாவும் சிறப்பாக நடை பெற்றது. அன்று ஜோன் தனக்குக் கிடைக்கப் பெற்ற பொருள்களைத் தனக்கென ஒன்றும் மிகுத்து வைக்காமல் ஏழை கட்கும் போருக்குமே பயன்படுத்தினள். ஜோன் வேண்டு கோளின்படி டாம்ரிமி என்னுந் தன் ஊரவர்கட்கு வரிநீக்கமுஞ் செய்யப்பட்டது.


பின்னர், பெட்போர்ட் என்னும் ஆங்கிலத் தலைவன் பாரிசில் ஜோனெடு பெரும் போர் செய்தான். அரசன் அப்போது ஜோனுக்கு யாதொரு உதவியுஞ் செய்ய இசையவில்லை. ஜோன் பாரிசில் போர் புரியும்போது ஒரு கூரிய அம்பு அவள் தொடையை ஊடுருவிச் சென்றது. அத் துன்பத்தையும் பாரா

மல் ஜோன் தன் படையை ஊக்குவித்து அங்கே வெற்றி பெற்ருள். எனினும் இவள் பாரிஸ் முழுமையும் கைப்பற்றவில்லை. இதற்கிடையில் ஜோன் அரசனுல் டெனிசுக்கு அழைக்கப்பட்டாள். ஜோன் நகரங்களிலில்லை என்பதறிந்த ஆங்கிலர் தாங்கள் முன்பு இழந்த சில ஊர்களைத் தமவாக்கிக்கொண்டனர். இதனை யறிந்துங்கூட அரசனுக்கு யாதொரு வருத்தமுமில்லை.

பின்பு ஜோன் மௌஸ்டீயரைப் பிடிக்க அனுப்பப்பட்டாள். அதனைக் கைப்பற்றிப் பின்பு மெலன் என்னும் ஊரைத் தாக்கச் சென்றனள். அக்காலத்தில் 'விரைவிற் ஜோன் பகைவர்களால் சிறைப்படுத்தப்படுவள்' என்று அவளுக்குத் தெய்வ வொலி கேட்டது. அப்போது பர்கண்டிச் சிற்றாசன் காம்பீன் என்னும் நகரத்தை முற்றுகை யிட்டனன். அதனைக் கேட்ட ஜோன் ஆங்குச் சென்று மிக்க திறமையோடு போர் புரிந்தனள். இவளுக்கு அக நட்பின்றி முகநட்பினராக இருந்து சிலர் செய்த சூழ்ச்சியினுல் இவள் தோல்வியுற்று ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டு மிகவும் உயரமான ஒரு கோபுர அரணில் அடைக்கப்பட்டாள். அக்காலத்தில் தனக்கு முடிசூட்டிப் பல்லாற்ருனும் உதவி புரிந்த இவ்வருண் மாதுக்கு அரசன் உதவி செய்ய முன்வரவில்லை என்பது வருந்துதற் குரியது. பின்பு ஜோன் தெய்வக் கட்டளைக்கு மாருக, காம்பீன் மக்கட்குத் திரும்பவும் உதவிபுரிதற் பொருட்டுக்கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே குதித்தனள். அங்ஙனங் குதித்ததால் அவள் உறுப்புக்களுக்கு ஊனமொன்றும் ஏற்படவில்லை. ஆனுல் மூன்று நாட்கள் வரையில் உணர்விழந்து கிடந்தாள். இவள் தானுகவே கீழே குதித்தமைகண்ட ஆங்கிலர் இவளை இருப்புக் கூட்டில் அடைத்து வைத்தனர். இவளுக்கு உணவும் ஏனைய வசதிகளும் கொடுக்கப்படவில்லை. பின்பு இவள் தனக்குப் பகைவரான சில பிரான்சு மக்களால் அறமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டாள். இவளைக் குற்றஞ் சாட்டுதற்காக இவளிடம் கேட்ட கரவான கேள்விகள் பலவற்றிற்கும் சிறிதும் அஞ்சாது ஏற்ற விடை கூறினள். முடிவாக இவளை மாயக்காரி என்றும், மந்திரக்காரி என்றும் பேய்த்தொடர்புடையவளென்றும், ஆணுடையுடுத்தியது குற்றமென்றும், அருண் முனிவர்களைக் கண்டதும் தெய்வ வொலி கேட்டதும் பொய்ம்மை என்றுங் கூறி அறமன்றத்தினர் இவள்மீது பொய்க்குற்றஞ் சாட்டினர். முடிவாக இவர்கள் பல்லார் முன்னிலையில் இத்தெய்வ அருண்மாதை ஒரு கழுமரத்திற் கட்டி வைத்துத் தீயிட்டுக் கொளுத்திக் கொன்றனர். இப்பொல்லாக் கொடும்பழிச்செயல் உலக முள்ளளவும் மக்களான் மறக்கற்பால தொன்றன்று.



திருவாதவூர்.



திருவாதவூர்.

எ இ-ம் பக்கம் பார்க்க.